விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 28 | வியாழக்கிழமை (10.02.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 53

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து

## உச்சக்கட்ட பொறுமையை புலிகள் பேண வேண்டும்

### நோர்வே தூதுவரிடம் ஹக்கீம்

(அம்பாறை)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் நேற்றைய தினம் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் ஹக்கீமின் இல்லத்தில் சுமார் ஒரு மணி நேரம் வரை இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் கொலையானது கண்டிக்கத்தக்கது எனக் ஹக்கீம் தெரிவித்தார்.

இச் சம்பவம் போர்நிறுத்த உடன்பாட்டினை பாதிக்கும் அளவிற்கு சென்றுவிடக் கூடாது என்று வலியுறுத்திய அவர், இதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது உச்சக் கட்டப் பொறுமையினை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் பிரதேசங்களைக் காட்டிலும் தென்னிலங்கைப் பகுதியில் புனரமைப்புப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் வழித்துணையுடன் தமிழ்ச்செல்வன் குழு மட்டு. விஜயம்

(கிளிநொச்சி)

நோர்வேயின் வழித்துணையோடு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அடங்கிய குழுவினர் மட்டக்களப்புக்கு நேற்று பயணமாகினர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சியிருந்து உலங்கு வானூர்தி மூலம் மட்டக்களப்புக்கு சென்ற அவர்கள் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் இ. கௌஸ்யன் உட்பட 4 மாவீரர்களின் வணக்க நிகழ்விலும்

(12 ஆம் பக்க்ம் பார்க்க)



## புலிகள் மீதான தாக்குதலுக்கு வன்மையான கண்டனம்

# யுத்தநிறுத்த உடன்பாட்டை சீர்குலைக்கும்


# நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்



### ஐ.நா.செயலர் கொபி அனான் அவசர வேண்டுகோள்

(நியூயோர்க்)

**தமிழீழ விடுதலைப் புலியினர் மீது தாக்குதலைத் தொடுத்து யுத்த நிறுத்த உடன்பாட்டை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கொபி அனான் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



நியூயோர்க்கில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இந்த அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்[illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சகல



அஞ்சலிக்காக பவனியாக எடுத்துச் செல்லப்படும் கௌசல்யன் உட்பட்ட போராளிகளின் வித்துடல் பேழைகளைப் படத்தில் காணலாம்.

# கௌசல்யனின் வித்துடலுக்கு பல்லாயிரம் மக்கள் அஞ்சலி

## மட்டக்களப்பில் இன்று வித்துடல் விதைப்பு

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் இ. கௌசல்யன் உட்பட 4 போராளிகளின் வித்துடல்கள் இன்று மாலை மட்டக்களப்பு தாண்டியடி மாவீரர்கள் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படவுள்ளன.

நேற்றுக் காலை அவர்களின் வீடுகளில் வைக்கப்பட்டிருந்த வித்துடல்கள், பொதுமக்களின் அஞ்சலிக்காக கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிசன் பாடசாலை மண் [illegible] பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வித்துடல்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்தும் வருகை தந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது இறுதி வணக்கத்தை செலுத்தினர். பின்னர் கண்டுமணி மகாவித்தியாலய மண்டபத்திலிருந்து நேரடியாக பட்டிருப்பு பாலம் வழியாக அம்பாறை மாவட்டத்திற்கு வித்துடல்கள் எடுத்துச்செல்லப்பட்டன.

கல்முனை, அக்கரைபற்று, காரைதீவு, திருக்கோவில் ஆகிய இடங்களிலுள்ள

(12வம் பக்கம் பார்க்க)

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இந்த அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் ஏனைய போராளிகளும் கொலை செய்யப்பட்ட சம்பவம் மிகவும் கண்டனத்துக்குரியது. கௌசல்யனும் அவரது சகாக்களும் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது நடாத்தப்பட்ட படுகொலைத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்[illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சகல கட்சி அங்கத்[illegible]வர்களும் கட்டுப்பாட்டுடன் செயற்பட்டு அமைதிகாக்க வேண்டும். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

சமாதான முயற்சிகளை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் எதுவும் தொடர்ந்து இடம் பெறாது பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# துணைப்படைகளின் ஆயுதம் உடன் களையப்பட வேண்டும்

## மனிதவுரிமைகள் செயலகம் அவசர வேண்டுகோள்

(கிளிநொச்சி)

அரசுடன் இணைந்து இயங்கிவரும் துணைப்படைகளின் ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும் என வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

கௌசல்யன் உட்பட ஐவர் படுகொலை செய்யப்பட்ட வெலிக்கந்த சம்பவத்தைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கந்தை சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் (மன்னிமுக்க ஆசு உரிய விசாரணைகளை உடன் ஆரம்பிக்கவேண்டும். அதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக, மனித உரிமை ஆர்வலர்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்களை படுகொலை செய்யும் நடவடிக்கைகளை நிறுத்த அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும். அரசுடன் இயங்கும் துணைப்படைகளின் ஆயுதங்களை களைய ஆவன செய்தால் இப்படியான படுகொலைகள் தொடராமல் தடுக்கலாம். இது உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


(ச)

# வார்த்தைகளால் சொல்லக் கூடியதை விட மௌனத்தினால் சாதிக்கக் கூடியவை அதிகம்

## விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது பிரி



வினை வாதிகளுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தமது இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் நிகழ்வுகள் இடம் பெற்றுளளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கமும் கட்சி என்ற வகையில் தாமும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பொறுப்புடன் நடந்து கொண்டாலும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுக்களில் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் கீழ்மட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் புரிந்துகொள்ளக்கூடியவர்கள் அல்ல.

இதன் காரணமாகவே நிவாரணப் பணிகளில் பல மோசடிகளும், நிவாரண விநியோகத்தில் குறைபாடுகளும் இடம் பெற்றுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனானை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லாதிருக்கச் செய்வதைத் தவிர, சுனாமியின் பெயரால் இடம்பெற்ற மோசடிகளை எம்மால் தடுக்க முடியவில்லை.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே சுனாமி தொடர்பான விவாதத்தில் எமது கட்சி பங்குபற்றவில்லை.

வார்த்தைகளினால் சொல்லக் கூடியதை விட, மௌனத்தினால் சாதிக்கக் கூடியவை அதிகம் என்றும் விமல் வீரவன்ஸ பாராளுமன்றத்தில் நேற்றுத் தனதுரையில் குறிப்பிட்டார். (ற-9)

## கற்றல் உபகரணம் வழங்கல்

(மண்டைதீவு)

மண்டைதீவு மகாவித்தியாலய மாணவர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால 19 ஆயிரத்து 463 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுது கருவிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இவ் உபகரணம் வழங்கல் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உறுப்பினர் க.துவாரகன் மற்றும் அகில இலங்கை இந்துமா மன்ற அமைப்பாளர் குணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ப)

## பரீட்சை

சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் 2003 ஆம் ஆண்டுக்கான சைவப் புலவர் பரீட்சை ஏப்ரல் மாதக் கடைசிப் பகுதியிலும், சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சை மே மாத முதல் வாரத்திலும் நடைபெறவுள்ளது. (ற-19)

# நாட்டை மீளக் கட்டியெழுப்ப உள்நாட்டு புத்திஜீவிகளின் உதவிகளை பெறுவதில் அரசு அசமந்தப்போக்கு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீளக்கட்டியெழுப்ப உள்நாடடுப் புத்திஜீவிகள் மற்றும் தொழில் சார்ந்தோரின் உதவ்விகளைப் பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் முறையான திட்டங்களைக் கைக்கொள்ளவில்லை யென மாத்தறைப் புதிய நகர அபிவிருத்திக் குழுவின் தலைவர் பேராசிரியர் கிரிசாந்தெஹரகொட தெரிவித்துள்ளார்.

இதற்கென உதவிகளை இலவசமாக வழங்குவதற்கு தொழில் முன்னோடிகள் பலர் முன்வந்த போதும், அரசாங்கம் அது தொடர்பாக உரிய கவனம் எடுக்கவில்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், நாட்டை மீளக்கட்டியெழுப புவதற்குத் தேவையான செயற்திறன் உள்நாட்டு நிபுணர்களிடம் காணப்படுவதாகவும் பேராசிரியர் கிரிசாந் தெஹரகொட மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-7)

# அஞ்சல் தந்தித் தொடர்பு ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சேவையிலுள்ள அஞ்சல் தந்தி தொடர்பு சேவையாளர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளனர்.

காலை 7.30 மணி தொடக்கம் 8 மணி வரை இப்போராட்டம் யாழ்.பிரதம தபாலகத்தில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை அஞ்சல் தந்தி தொடர்புகள் சேவையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இப்போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக யாழ்.குடாநாட்டில் உள்ள உபதபாலகங்களில் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணி வரைக்கும் இப்போராட்டம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடையாள வேலைநிறுத்தமாக நடைபெறும் இப்போராட்டத்தில், பாதிக்கப்பட்ட தபால் ஊழியர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் உயர் அதிகாரிகளால் ஏற்கப்படாதுவிடில் எதிாவரும் 24 ஆம் திகதி தொடக்கம் அஞ்சல் ஊழியர்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை அஞ்சல் அதிபரின் இடமாற்றம் தொடர்பாக ஏற்பட்டுள்ள அஞ்சல் ஊழியர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைத் தொடர்ந்து இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது. (ப)

## இராசிபலன்

**10.02.2005**

**(தை 28 வியாழக்கிழமை)**

**துதியை பின்னிரவு 1.18 மணிவரை**

**சதயம் முன்னிரவு 8.25 மணிவரை**

**இராகுகாலம் 02.04 - 03.39**

**சுபநேரம் 08.04 -09.34 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வ நம்பிக்கை, தனதானிய சேர்க்கை, ஆனந்தம் |
| இடபம் | இஷ்ட சித்தி, நன்கொடை, ஆரோக்கியமான நிலை, நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | பெரியோர் வெறுப்பு, உத்தியோக பலிதம், காரிய தாமதம், கட்டுப்பாடு. |
| கடகம் | பிரயாணம், அஜீரண கோளாறு, காரிய தாமதம், பொருள் விரயம். |
| சிங்கம் | மனோ தைரியம், அபூர்வசந்திப்பு, எடுத்த்காரியம்கைகூடும், பொருள் சேர்க்கை. |
| கன்னி | மனமகிழ்ச்சி, சுபநிகழ்வு, பிறர்உதவி, காரிய அனுகூலம். |
| துலாம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரியஇடையூறு, குடும்பக்கவலை. |
| விருச்சிகம் | தன்னம்பிக்கைக் குறைவு, சகோதரர் உதவி, ரோகநிலை, தொழில் நன்மை. |
| தனுசு | மனோதைரியம், நற்கீர்த்தி, தேக நலன், முயற்சி கைகூடும். |
| மகரம் | அதிக செலவு, மனோசங்கடம், போசன சுகக்குறைவு, கௌரவக்குறைவு. |
| கும்பம் | வெகுமானம், போசன சுகம், தேக நலன், நல்ல முயற்சி. |
| மீனம் | சோம்பல் நிலை, காரிய அலைச்சல், பணவிரயம், திடீர் நன்மை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**
**- வளவன்**

## தேர்வு முடிவுகள் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவ நெறித்தேர்வு முடிவுகள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இச்சைவ நெறித்தேர்வில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த 476 பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(சங்கானை)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பிரதேச சபைக்குட்பட்ட சகல திணைக்களத் தலைவர்களையும் கலந்து கொளளுமாறு கேட்கப்பட்டுள்ளது. கூட்டத திற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகனறாஸ தலைமை தாங்கவுள்ளார். (ப-20)

## நிர்வாகிகள் தெரிவு

(சங்கானை)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த மாதம் 23 ஆம் திகதி அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் புதிய நிர்வாகக் குழுத் தலைவராக சமாதான நீதவான் சி.இராசலிங்கமும் செயலாளராக சமாதான நீதவான் செ.குமாரலிங்கமும், பொருளாளராக சி.சிவலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 17 பேர் கொண்ட நெறியாளர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ப-20)

# புலிகளைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது

## ராஜிதசேனாரட்ண விசனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மட்டு. அம்



பாறை மாவட்ட அரசியல் துறைபொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் ஐவர் கொல்லபபட்ட சம்பவம் தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி கருத்து வெளியிட்டுள்ளது.

ஐ.தே.க. தலைமையகத்தில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது தொடரபாக கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன,

இந்த படுகொலைச் சம்பவமானது சமாதான செயற்பாடுகளில் தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது.

போர் நிறுத்த உடனபடிக்கையின் படி அரசாங்க கட்டுப்பாட்டுப்பகுதிகளில் நிராயுத பாணிகளாக நடமாடும் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பாது காப்பை வழங்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அந்தக் கடமையை அரசாங்கம செய்யத் தவறிவிட்டது எனத் தெரிவித்துள்ளார். (ப)

# தவறி வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் புதிய தண்ணீர்த் தாங்கிகட்டும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் தவறி வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் பழைய தண்ணீர் தாங்கி அமைந்துள்ள இடத்திற்கருகாமையில் புதிதாகத் தண்ணீர்த் தாங்கியைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரே மேலிருந்து தவறுதலாகக் கீழே வீழ்ந்ததில் மரணமானார்.

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த ராமச்சந்திரா உசந்தகுமார (வயது 35) என்பவரே இவ்வாறு மரணமான வராவார்.

உரிய முறையில் பாதுகாப்புக் கவசங்கள் அணிந்து பணியில் ஈடுபடாததனாலேயே இவர் தவறி வீழ்ந்து உயிரிழநதுள்ளதாகத் தெரியவருகிறது. (ற-19)

# புண்ணிய நாச்சியார் தின பண்ணிசைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

புண்ணிய நாச்சியார் தினத்தை முன்னிட்டு சைவபரிபாலன சபையினால் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படவுள்ள பண்ணிசைப்போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என 3 பிரிவுகளாக நடததப்படவுள்ள இப பண்ணிசைப் போட்டிகள் ஒரே தினத்திலேயே நடைபெறும்.

கீழ்ப் பிரிவில் 53 மாணவர்களும், மத்தய பிரிவில் 43 மாணவர்களும், மேற்பிரிவில் 33 மாணவர்களும் இப் போட்டியில் தோற்றவுள்ளனர்.

இப்போட்டியில் தோற்றி மூன்று பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கும் முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் வழங்கப்படவுள்ளன,

இதற்கான பரிசில்கள் எதிர்வரும் 19 ஆம் திகதியன்று நடைபெறவுள்ள புண்ணிய நாச்சியார் தின விழாவில் வைத்து வழங்கப்படும். (ற-19)

# ‘சுனாமி’ ஏற்படுத்திய இழப்புகள் ஈடுசெய்யப்பட முடியாதவை

## -யாழ். ஆயர்

(குருநகர்)

அண்மையில் இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளைத் தாககிய சுனாமி அனர்ததத்தினால பெண்களும், குழந்தைகளுமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். ஆயா தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அண்மையில் குருநகர் புதுமை அன்னையின் ஆலயத் திருவிழாவில் மறையுரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தொிவிக கையில்,

சுனாமி என்றழைக்கப்படுகின்ற கடல் கொந்தளிபபினால் ஏற்பட்ட அனர்த்தங்கள், இழப்புகள் பெரியவையாக இருக்கின்றன.

கண்மூடி முழிப்பதற்குள் ஏராளமான உயிர்கள் பறிக்கப்பட்டன. சொத்துக்கள் அழிக்கப்படடன. கிராமங்கள், பட்டனங்கள் எல்லாம் இருந்த இடமே தெரியாதவாறு முற்றாகச் சேதமாக்கப்பட்டன. எம்மால் நினைத்துக்கூடப பார்க்க முடியாதளவிற்கு சுனாமியினால் சேதங்கள் விளைவிககபட்டிருக்கின்றன.

மாபெரும் கூட்டங்கள் என்ன, பெரிய மரச்சோலைகள் என்ன எல்லாம் பெயர்க்கப்பட்டு சுக்குநூறாக சின்னாபின்னமாகச் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவறறின் மத்தியில் பாாிய பொருள் இழப்புக்களுக்கு மததியில் நாம் மிகவும் துக்கபபடுகின்றோம். கிட்டத்தட்ட 35 ஆயிரத்திற்கும் மேல் உயிரிழப்புககள ஏற்பட்டுள்ளன. இதுதவிர, இன்னும் ஒவ்வொருநாளும் இந்தத் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. ஒருகணத்தில் இவ்வளவு தொகையான மக்கள் இறந்து போய்விட்டார்கள். இந்தப் பரிதாபமான காட்சிகள் நெஞ்சைப் பிழிவனவாக உள்ளன.

மக்கள் இந்தச் சோகத்தில் இருந்து இன்னமும் மீளவில்லை. இந்த இழப்புகளில் எல்லாம் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெணகளும், குழநதைகளும்தான. கிட்டததட்ட உயிாிழந்தவர்களில் 60சதவீதத்திற்கும் மேலானவர்கள் இவர்களே.

ஒரு குருவானவர் எனக்குச் சொன்னார், ‘பூசை ஒப்புக் கொடுக்கின்ற நேரத்தில் முன்னால் இருப்பவர்கள் எல்லாம் சிறுபிள்ளைகள். அவாகளைததான நாங்கள் பார்த்துக்கொண்டு பூசை வைப்போம். இப்போது பூசை வைக்கும்போது அந்த இடம் வெறுமையாக இருக்கின்றது. அந்த இடத்தில் பிள்ளைகள் இல்லை’ என்றும்,இச் சிறுவாகள எல்லோரையும வெள்ளம் அள்ளிகொண்டு போய்விட்டது. ஏராளமான பிளளைகள இறந்துவிட்டார்கள்.

இது மாத்திரமல்ல. இதில் சோகமான விடயம் என்னவெனறால் ஏராளமான தாய்மார்கள் உயிரிழந்துள்ளார்கள்.

அகதி முகாம்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்கச் சென்றபோது தாய்மாாகள் இல்லாத குழந்தைகளின் சோகத்தை அறியக்கூடியதாக இருந்தது.

தகப்பன் இல்லாவிட்டாலும் குடும்ப வண்டி ஓரளவு ஓடும் என்று நமக்கு நன்றாகத் தெரியும். ஒருதாய் இல்லாவிட்டால் எப்படிக் குடும்பம் நடக்கும்? எனக கேள்வி எழுப்பினார். (ற-4)

---

## சொற்பொழிவு

சந்தியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின ஆச்சிரமததின் வாராந்த நிகழவாக நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு ‘வாழ்த்தி வணங்குவோம்’ எனும் தலைப்பில் துணைவியூர் இ.கேசவன் ஆசிரியா சொற்பொழிவு ஆற்றுவார். (ப-101)

❁ ❁ ❁

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 14வது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை மு.ப.10.00மணிக்கு இணையப் பணிமனையில் வி.ஸ்ரீசக்திவேல தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ற-16)

❁ ❁ ❁

## கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை தும்பளை மேற்கு காரைக்கலட்டி அருள் மிகு வைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ளது. (ப-35)

❁ ❁ ❁

## நிதி உதவி

(மருதங்கேணி)

உசன் ஐக்கிய நாணய சங்கம வடமராட்சியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு இரண்டாயிரத்து 500 ரூபா வீதம் ஒரு லடசம ரூபாவை வழங்கியுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் க.பேரம்பலம் தலைமையிலான குழு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்து இப்பண உதவியை வழங்கியது. (ப-35)

❁ ❁ ❁

---

### வடமராட்சியில் மீனவர்களுக்கு

# ஜேர்மன் கியூமெடிக்கா நிறுவனம் மேலும் 15 படகுகளை வழங்கும்

(திருநெல்வேலி)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மீனவாகளின் மறுவாழ்வை மையமாக வைத்து ஜேர்மன் நாட்டு கியூமெடிக்கா நிறுவனத்தால் இரண்டாம் கடட மாக 15 படகுகள் வழங்கபபடவுள்ளன.

இப் 15 படகுகளும் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு நேறறு வடமராடசிகு எடுத்துவரப பட்டது.

வடமராட்சிக்கு எடுத்துவரப் பட்ட இந்தப் படகுகள வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தின் ஊடாக சுனாமியால் பாதிப்படைந்த மீனவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்றவகையில் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ற-43)

---

### வரிமன்னிப்புச் சட்டம்

# நிராகரிக்கப்பட்டதனால் அரசிற்கு அதிக லாபம்

(கொழும்பு)

வரிமன்னிப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதன் மூலம் வரி மூலமாக கூடுதலான வருமானததை அர சாங்கத்தால் திரட்ட முடிநதிருக்கின்றது என்று பிரதி நிதியமைச்சர் ரஞசித் சியாம்பலபபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் பதின்மூன்றாயிரம் புதிய வரிக்கோப்புக்கள திறக்கப்பட்டுள்ளன என்றும் பொருட்கள், சேவைகள் வரி மூலம் 81கோடி ரூபாவுக்கும் கூடுதலான தொகை திரட்டப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வரிமன்னிப்பு நகல் சட்ட மூலம் மீதான விவாதத்தில் பதிலளித்துப் பேசுகையில் அவா இதனைத் தெரிவித்தார்.

இன்று வழங்கப்படடுள்ள ஏற்பாடுகள் வரவு-செலவுத்திட்டப் பிரேரணைகளுக்கு சட்டபூர்வமான ஆதரவைத் தரும். இந்தப பணத்தைப் பயன்படுத்தி பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது என அவா மேலும் தெரிவித்தார். (ப-4)

---

### காந்தியின் சிரார்த்ததினம்

# யாழில் அனுஷ்டிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காநதி சேவா சஙகத்தின் ஏற்பாட்டில் மகாதமா காந்தி அடிகளின் 57ஆவது நினைவுதினம் கடந்த மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

காலை நிகழ்வுகள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தி அடிகளின் சிலையடியல் முற்பகல்11மணிக்கு ஆரம்பமாயின.

அடிகளாரை நினைவுகூரும் பாடல்கள் அவ்விடத்தில் ஒலிபரபபபபட்டன. மூத்த காந்தீய தொண்டர் ஆ.சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் சங்கத் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை, மில்க்வைற் அதிபர் இ.தவகோபால் ஆகியோர் சிலைகது மலாமாலை அணிவித்தனர். தொடர்ந்து உறுப்பினர்களும், பொதுமககளும் மலரஞ்சலி செலுத்தினர். யாழ். பல்கலைக்கழக மாணவன் எம்.ஷாந்தன் சததியகீாததி அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3மணியளவில் கந்தர்மடம வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின அருளாசியுடன் ஆரம்பமாயின.

வழிபாடு, பிரார்த்தனையைத் தொடர்ந்து சங்கத் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில யாழ்பபாணம் தேசிய கல்வியியற கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் “மகாத்மா காநதியடிகளின் தத்துவார்த்த கல்வியற் சிந தனைகளும் பிரயோகங்களும்” எனும் தலைபபில் நினைவுப் பேருரை ஆற்றினார். தொடாநது ‘காந்தயம்’ நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ப)

---

# ஐரோ. பாராளுமன்ற உறுப்பினர் தமிழ்ச் செல்வனை சந்தித்தார்

(கிளிநொச்சி)

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி தொடர்பான திட்டங்களுக்கான முன்மொழிவுகள புலம்பெயர்ந்த தமிழ் நிபுணர்கள் ஊடாக ஆலோசிக்கபபட்டு வருவதாக தமிழீழ அரசியலதுறைப் பொறுப்பாளா சு.ப. தமிழ்சசெல்வன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் றொபேட் ஈவின்ஸ சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் யாழ். மாவடட அரசியலதுறைப் பொறுபபாளர் சி. இளம்பரிதியைச் சந்தித்த றொபேட் ஈவின்ஸ் சனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் பார்வையிட்டார்.

பின் வன்னிக்குச் சென்ற அவர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னர்,

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுக்கும சென்று அழிவுகளை நேரில் பார்வையிட்டார். (ப-4)

---

# கடற்புலிகள் உதவி

(மருதங்கேணி)

சுனாமிப் பேரலையால் பாதிககப்பட்ட வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு வடமராட்சி கிழக்கு கடற்புலிகளும் மாணவர் அமைபபும் இணைந்து கற்றல் உபகரணங்களை வழஙகியிருககிறது.

இதன் முதறகட்டமாக கேவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை, தாளையடி றோமன்கத்தோலிக்க பாடசாலை மாணவர்களுக்கு கொப்பிகள், பென்சில்கள், கலர் பெட்டிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ப-35)

---

### ஐரோப்பிய ஒன்றியம்

# 1.7 பில்லியன் நிதி உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு வீதிப் புனரமைப்பு நிகழ்சசித் திட்டம் தொடர்பான ஆவணத்தை ஐரோப்பிய ஆணைக்குழு நிதியமைச்சிடம் கையளித்துள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்தின் அவசர உதவித் திட்டங்களுக்கு உதவும்முகமாகவும், நீண்ட காலப் புனர்வாழ்வுத்திட்டங்களை முன்கொண்டு செல்வதறகுமாக 1.7பில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

கடந்த யுத்த அனர்த்தங்கள் காரணமாகவும், சுனாமியின் பின்னரும் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள பாதைகளைப் புனரமைப்பது என்ற அம்சத்தின் அடிப்படையில் 550 கிலோமீற்றர் நீளமான வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

அத்துடன் வறுமை ஒழிப்புத் திட்டமும் இந்தத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேவேளை மனித உரிமை நலன் திட்டங்களும் இதில் அடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ப-4)

---

# மருந்தாக்கலுக்கான தேசிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மருந்தாக்கலுக்கான தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

1992, 2000ஆம் ஆண்டுகளில இது தொடர்பான கொள்கை ஒனறு வகுக்கப்பட்டபோதிலும், பல காரணங்களால அது நிறைவேறறப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் மக்கள் பெருமளவு நன்மையடையவுள்ளனர். நாட்டின் எந்தப் பகுதியிலும் நிர்ணயிக்கபபட்ட விலையில் மருந்துப் பொருட்களைப் பொதுமக்கள் கொள்வனவு செய்ய முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மருந்து பற்றிய உண்மையான தகவல்களை வழங்குவதன் மூலம் பாரிய அளவில் மருந்துகளைத் தயாரிப்பவர்களின் ஏகபோக உரிமையிலிருந்து மக்களைப் பாதுகாக்க இச்சட்டமூலம் உதவும் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அனைத்து அபிவிருத்தியடைந்த நாடுகளும் இத்தகைய கொளகையையே அமுலாக்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற-7)

# க.பொ.த.(உ/த) பரீட்சை ஜுன் -6 இல்; பாடசாலை தவணைகளில் மாற்றம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயாதரப் பரீட்சை ஜுன் மாதம் 6 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டிருப்பதன் காரணமாக பாடசாலைக் கல்வித் தவணைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, சகல அரசாங்கப் பாடசாலைகளும் முதலாவது தவணை விடுமுறைக்காக ஏப்ரல் 9 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை மூடப்படும்.

இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் 25 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் பாடசாலைகள், ஜுன் மாதம் 3 ஆம் திகதி மூடப்படும். ஜுன் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் ஜுலை மாதம் 3 ஆம் திகதிவரை இரண்டாம் தவணைக்கான விடுமுறைக் காலமாகும்.

மூன்றாம் தவணையில் இரண்டு வகுப்புத் தொடர்கள் இடம் பெறும். முதல் வகுப்புத் தொடர் ஜுலை மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் 16ஆம் திகதிவரை நடைபெறும். செப்ரெம்பர் 17 ஆம் திகதி முதல் 25 ஆம திகதி வரை குறுகிய கால விடுமுறை வழங்கப்படும்.

இரண்டாவது வகுப்புத் தொடர் செப்ரெம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 9 ஆம் திகதி வரை நடைபெறும்.

மூன்றாம் தவணை விடுமுறை டிசம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதிவரை வழஙகப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் காரணமாக சாதாரண தரம் மற்றும உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏறபடாதிருப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ற-7)

# இந்தியக் குடியரசுத் தலைவருக்கு தோள்பட்டையில் எலும்பு முறிவு

(புதுடில்லி)

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமிற்கு வலது பக்கத் தோள்பட்டை எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சீரமைக்கப்பட்ட 'கோல்வ்' மைதானத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டதன் காரணமாக வழமையாகச் செல்லும் நடைப்பயிற்சிக்கு இவர் தாமதம்ாகவே சென்றார்.

மூலிகைத் தோட்டத்தில் நடந்து சென்றபோது எதிர்பாராத விதமாக கால் தடுக்கி இவர் வீழ்ந்தார்.

உடனடியாக டாக்டர்கள் வரவழைக்கப்பட்டு அப்துல் கலாமின் உடல் சோதிக்கப்பட்டு தோள்பட்டைப் பகுதியில் எக்ஸ்ரே மற்றும் ஸ்கான எடுத்துப் பார்த்தபோது அவரது வலது தோள்பட்டை எலும்பில் முறிவு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. (ற-7)

# 'சுனாமி' முன்னெச்சரிக்கை கிடைத்ததா? ஆராய விசேட குழுவொன்று நியமனம்

கடந்த வருடம் டிசம்பர் 26 ஆம் திகதி வடக்கு சுமாத்திராவில் ஏற்பட்ட பூகம்பம் தொடர்பாக இலங்கையின் எந்தவொரு நிறுவனத்திற்காவது முன்னெச்சரிக்கை கிடைக்கப்பெற்றதா? என்பது குறித்து விசாரிக்கவென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

இவ் ஆணைக்குழுவில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி எச்.எஸ்.யாப்பா, மேன்முறையீட்டு நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி பி.எச்.குலதிலக ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இவ் ஆணைக்குழு எந்தவொரு அரச நிறுவனமாவது மக்களுக்கு சுனாமித் தாக்கம் குறித்து முன்னறிவித்தல கொடுக்கத் தவறியதா என்பது தொடர்பாக ஆராயும்.

மூன்று மாதத்திற்குள் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவை ஜனாதிபதி கேட்டுள்ளமை குறிப்பிடததக்கது.(ற-7)

# சம்பள அதிகரிப்பை வழங்கக் கோரி டிப்போ ஊழியர்கள் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பை உடன் வழங்குமாறு கோரி மக்கள்மயப்படுத்தப்படட பஸ் டிப்போ ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

களுத்துறை பஸ் டிப்போ ஊழியர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த இந்த வேலை நிறுததத்திற்கு ஆதரவு தெரிவித்து அம்பலாங்கொடை உட்பட சில பஸ் டிப்போ ஊழியர்களும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில ஈடுபட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து போக்குவரத்து அமைச்சரின் தலைமையில் விசேட பேச்சுவார்த்தையொன்று நேற்று இடம்பெற்றதாக அமைச்சின செயலாளர் கலாநிதி ஜெயவர - தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பை வழங்குவ்து தொடர்பாக எந்தவொரு அறிவுறுத்தலும் கிடைக்கவில்லை என்றும் சம்பள உயர்வு குறித்து திறைசேரியின் அனுமதியை கோரியுள்ளதாகவும அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு 2ஆயிரத்து 500ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது என யோசனை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# திக்கம் மத்திய சனசமூக நிலையம் உறவிழந்த சிறார்களுக்கு உதவி

(துன்னாலை)

முல்லைத்தீவுப் பகுதியில் ஆழிப் பேரனர்த்தத்தினால் பாதிக்கபபட்டு தாய் தந்தையரை இழந்த சிறார்களுக்கு வடமராட்சி திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினரால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அந்நிதி மேற்படி பாதிப்புக்குள்ளான சிறார்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு கடந்த சனிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கப் பணிமனையில் இடம்பெற்றது.

இதில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை கலந்து கொண்டார்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு 500 பெட்டி பிஸ்கட் வகைகளும் பெண்களுக்கான சேலைகளும் வழங்கப்பட்டன.

இதனை மேற்படி சனசமூக நிலைய உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று வழங்கினர். (ப-101)

# வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு 20 ஆம் திகதி முதல் உள்ளக இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அநதந்த மாவட்டத்தினுள் உள்ளக இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய, யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வலிகாமம் கல்வி வலயத்திற்கும், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தென்மராட்சி கல்வி வலயத்திற்கும்., தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா வடமராட்சி கலவி வலயத்திற்கும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரட்ணம் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவ் இடமாற்றங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதேபோன்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரட்ணம் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கும், முல்லைத்தீவு வலயக் கல்விப பணிப்பாளர் குருகுலராஜா கிளிநொச்சி கல்வி வலயத்திற்கும், துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரம, மடு கல்வி வலயத்திற்கும், மடு வலயக்கல்விப் பணிப்பாளர் குரூஸ் துணுக்காய கல்விவலயத்திற்கும் எதிர்வரும் 20 ஆம் தகதி முதல் இடமாற்றம செய்யப்படவுள்ளனர். (ற-19)

# அனர்த்தம்

(கொழும்பு)

சுற்றாடலுக்கு மனிதன் ஏற்படுத்திய தீங்கு காரணமாகவே சுனாமி அனர்த்தத்தின் தாக்கம் மிக மோசமானதென கலாநிதி கிரிசாந் தெஹரகொட தெரிவித்துள்ளார்.

ஹிக்கடுவையில் தெல்வத்த என்ற இடத்தில். பயணிகள் ரயில் சுனாமி அலைகளால் அடித்துச்செல்லப்பட்டதை உதாரணம் காட்டிய அவர், அப்பகுதியில் பவளப்பாறைகள் பெருமளவு அகழப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார். (ற-7)

# உதவக்கோரல்

(மருதங்கேணி)

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட 30 சிகை அலங்கரிப்பாளர் குடும்பங்களுக்கு உதவி செய்யுமாறு கியூமெடிக்கா நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சிகை அலங்கரிப்பாளரின் சேதமடைந்த கடைகளை திருத்துதல், கடல் பேரலையால் கடலால் அடித்துச்செல்லப்பட்ட உபகரணங்களை புதிதாக கொள்வனவு செய்வதற்கு உதவுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-35)

# 2004 ஜனவரியில் 3 வருட சேவையை பூர்த்திசெய்த தொண்டர் ஆசிரியர்களுக்கு இரு மாதங்களில் நியமனம்

(கொழும்பு)

பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக 3 வருடங்கள் பணியாற்றியவர்களுக்கு இன்னும் இரண்டு மாதங்களில் நிரந்தர நியமணம் வழங்கப்படவுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியன்று 3வருட சேவையைப் பூர்த்திசெய்த தொண்டர் ஆசிரியர்களுக்கே எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக நிலவி வந்த தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை குறித்து கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடி மெல், ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்கவுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கஷ்ட அல்லது அதி கஷ்டப் பிரதேசத்தில் மேற்படி கால எல்லையில் 3 வருட சேவையாற்றிய 18 முதல் 45 வயதுக்குட்பட்ட, ஆசிரியர் சேவையின் ஆட்சேர்ப்புச் சட்டத்தின்படி அதற்குரிய தகைமைகளைக் கொண்டுள்ள, தொண்டர் ஆசிரியர்களுக்கு சேவையாற்றும் பாடசாலைகளிலேயே நிரந்தர நியமனம் வழங்கபபடுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ற)

# பதிவு செய்க

(கொழும்பு)

மிதிவண்டிகளாகவும், மோட்டார் சைக்கிள்களாகவும் பயன்படுத்தக்கூடிய வாகனங்களை நாளை மறுதினத்திலிருந்து பதிவுசெய்யவேண்டுமென்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

முன்னர் இத்தகைய வாகனங்களைப் பதிவுசெய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற-7)

# 'ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோரே பேறு பெற்றோர்'

## தவக்காலச் சிந்தனை

வலுவுள்ளவர்கள் தங்களது வாழ்வைப் பாதுகாத்துக் கொள்ள எத்தனையோ வழிகளை பின்பற்றி வருகின்றனர். சுற்றுச்சுவர்களை உயர்த்துகின்றனர். கதவுகளை இரட்டிப்பாக்குகின்றனர். நாய்களை அதிகப்படுத்துகின்றனர்.

உண்மையான வாழ்வைத் தேர்ந்து கொள்ள இழப்பு அவசியமாகின்றது. இதைத்தான் பல புனிதர்கள் வாழ்வில் பார்க்கின்றோம். புனித தாமஸ் மூர் என்ற புனிதர் (பொதுநிலையினர்) இயேசுவின் பொருட்டு தன்னையே இழக்கின்றனர்.

தூக்கு மேடைக்குக் கொண்டு செல்லப்படுகின்றார். தூக்கிலிடும் முன் கூறுகின்றார். "என் தாடியை வழித்துவிடுங்கள். என் தாடி என்ன தவறு செய் தது" என்று நகைச்சுவையாகக் கூறிச் சாவை ஏற்கிறார்.

தூய லாரன்ஸ் (திருத்தொண்டர்) காய்ச்சப்பட்ட இரும்பிலே போடப்படுகின்றார் அப்போது கூறுகிறார் "வயிறு பக்கம் வெந்து விட்டதால் பின்புறம் திருப்பிப் போடுங்கள்" எனக் கூறிக் கொண்டே தன்னையே அர்ப்பணிக்கின்றார்.

உண்மையான வாழ்வு இழத்தலில் அடங்கியுள்ளதுரு பெறுதலில் அல்ல, கொடுத்தலில் அடங்கியுள்ளது. இந்தப் புதிர் புரிகின்றதா?

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இன்று ஒரு தகவல்

## விரும்பப்படுவது எப்படி?

என்னைக் கண்டாலே எல்லோரும் விலகி ஓடுகிறார்கள் சார்! யாரும் நெருங்கி வருவதில்லை. எனது முகாசி அப்படி என்று சிலபேர் குறைசொல்வதுண்டு. இப்படிச் சொல்பவர்களின் மீதுதான் குறையே தவிர அடுத்தவர்களை இதற்காகக் குறை சொல்ல முடியாது. மற்றவர்களிடம் பேசுவதும் ஒருகலை. சிலருக்கு இது இயற்கையாகவே அமைந்திருக்கும். அப்படி இல்லாதவர்கள் இதைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். கொஞ்சம் முயற்சி செய்யவேண்டும் அவ்வளவு தான்.

பொழுது விடிந்து பொழுது போனால் எத்தனையோ பேரிடம் நாம் பேசவேண்டியுள்ளது, பழகவேண்டியுள்ளது. உறவினர்கள், அயலவர்கள்,அலுவலகத்தில் ஒன்றாக வேலை செய்பவர்கள், காய்கறி விற்பவர் இப்படி எத்தனையோ பேரைப் பார்க்கவேண்டி, பழகவேண்டியுள்ளது. அவரவர்க்கு ஏற்றுமாதிரி பிரியாமாகப் பேசிப் பழகுவது ஒருகலை அப்போது தான் எல்லோரும் நம்மிடம் பிரியமாக இருப்பார்கள்.

அடுத்தவர்கள் நம்மீது பிரியமாக இருக்கவேண்டும் என்றால் அவர்களிடம் போய் நின்று என்னிடம் நீ பிரியமாக இரு என்று கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது. நீங்கள் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்து அவர்களாக உங்களை விரும்ப வேண்டும். சரி! எப்படி நடந்து கொள்வது? இனிமையாகப் பேசும் தன்மை! அடக்கமான குணம், உதவி செய்யும் மனப்பான்மை , பெருந்தன்மை போன்ற குணங்கள் எல்லோருக்கும் பிடிக்கும்.

அதனால் இதுபோன்ற குணங்களை வளர்த்துக் கொள்வது நல்லது. அதை விட்டு விட்டு என் குணம் இது தான் இதை ஏற்றுக்கொள்பவர்கள் என்னிடம் வரட்டும்! அது போதும் என்று சொன்னால் நாம் பாட்டுக்குத் தனியாக இருக்கவேண்டியதுதான்.

நமக்கு ஒருவரைப் பிடிக்காவிட்டால் அனேகமாக அதற்குக் காரணம அவர்கள் நம்மை மதிக்கவில்லை என்ற குறையாகத்தான் இருக்கும். மற்றவர்கள் நம்மை மதிக்கும் அளவுக்கு நடந்துகொண்டால் நமக்கு எல்லோரிடமும் பிரியம் ஏற்படும். இன்னொருவரிடமுள்ள எந்தக் குணம் நமக்குப் பிடிக்கவில்லையோ அதேகுணம் நம்மிடமும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நான்கு பேருக்கு மத்தியில் இருக்கும் போது நாம் சிரித்தால் நிச்சயமாக மற்றவர்களுக்கும் சிரிப்புவரும். அதனால் சிரிக்கப்பழகிக்கொள்வது நல்லது. நமது வாழ்வில் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் உண்டு. இருந்தாலும் அவற்றிற்கு மத்தியில் நாம் சந்தோஷப்படுவதற்கும் நிறைவிஷயங்கள் உள்ளன. அதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

முதல முறையாக நாம் ஒருவரைப்பார்க்கிறோம். அவர் சிரிக்காவிட்டால் மிகவும் கர்வம் உள்ள ஆளாக இருப்பாரோ என்று நினைக்கத் தோன்றும். அப்படி இருக்கக்கூடாது ஒருவருக்கொருவர் கொஞ்சம் சிரித்துக்கொண்டால் மனதில் உள்ள இறுக்கம் போய்விடும். அதன்பின்பு கலகலப்பாக பேசுவதற்கு அது வசதியாக இருக்கும். நாம் பேசும் போது அதை மற்றவர்கள் கேட்கவேண்டும் என்று ஆசையாக இருக்குமே! அது போல்தானே அவர்களுக்கும் இருக்கும். அதனால் மற்றவர்கள் பேசுவதைக் காதுகொடுத்துக் கேட்கவேண்டும்.

ஒரு நண்பர் நம்மிடம் சார்! இன்று வரும் வழியில் பத்து அடி வாய்க்காலை ஒரே தாண்டாகத் தாண்டி வந்துவிட்டேன். என்று கொஞ்சம் பெருமையாகச் சொன்னால் உடனே நாம் "அது என்ன சார் பெரிய பிரமாதம்? நான் நேற்று 20 அடி வாய்க்காலை ஒரேயடியாக தாண்டிவிட்டேனே" என்று அளக்க ஆரம்பித்துவிடக்கூடாது நீங்கள் உண்மையாகவே 20 அடி தாண்டியிருந்தாலும் அதை இன்னுமோர் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளலாம்.

சிலருக்கு அடுத்தவர்கள் செய்யும் நல்ல காரியம் கண்ணில் படாது. ஏதாவது தவறுகளைச் செய்துவிட்டால் அது தான் பெரிதாகத்தெரியும் தினமும் வீட்டுக்குக் காய்கறி கொண்டு வரும் பெண்மணி எவ்வளவோ நாள் நல்ல காய்கறியாக தந்திருப்பாள் அதை மறந்துவிடுவோம். என்றாவது ஒரு நாள் அவள தந்த வெண்டிக்காய் முற்றலாக இருந்து விட்டால் அதை மட்டும் மறக்கமால் அவளிடம் சொல்வோம். நேற்றுக்கொடுத்த கத்தரிக்காய் நன்றாக புதிதாக இருந்தது என்று சொல்லத் தோன்றுமா? அப்படி நல்லதைப்பாராட்டும் குணத்தை வளர்த்துக்கொண்டால் நம்மீது எல்லோருக்கும் ஒரு விருப்பம் ஏற்பட்டு விடும்.

இன்னொரு விடயம் எல்லோருக்கும் தன்மானம் உண்டு. யாருக்கும் அவர்களைப்பற்றி விமர்சனம் செய்வது. குறையைச்சுட்டிக்காட்டுவது பிடிக்காது.இவ்வளவு விபரத்தையும் தெரிந்த இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள. ஒருவர் சொன்னார் "சார்! நான் வீட்டில் மிகவும் சாமர்த்தியமாக நடந்துகொள்கிறேன். சத்தம் போடமாட்டேன் அதனால என் மனைவி என்னைத்திட்டுவதேயில்லை" என்றார் மிகப்பெருமையாக. இதைக் கேட்டதும் இன்னொருவர் "சார்! நான் என் வீட்டில் அப்படி ஒன்றும் சாமர்த்தியமாக நடந்து கொள்வதில்லை. நிறையச் சத்தம் போடுவேன் அப்படி இருந்தாலும் கூட நானும திட்டுவாங்குவதில்லை" என்றார். அது எப்படி? என்று ஆச்ரியமாகக்கேட்டார் அவர். "அது ஒன்றும் பெரிய ஆச்சரியமில்லை! ஏனென்றால் எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையே" என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கௌசல்யன் மீதான தாக்குதல் சம்பவத்திற்கு இராணுவத்தினரே பொறுப்பேற்க வேண்டும்

## கிளி. வெகுஜன அமைப்புகள் ஒன்றியம் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**வெலிக்கந்தைப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு அரச படைகளே பொறுப்பேற்க வேண்டும். அத்துடன் இச்சம்பவத்தை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை செய்து உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும் என கிளிநொச்சி வெகுஜன அமைப்புகளன் ஒன்றியம் கோரியுள்ளது.**

**இது குறித்து ஒன்றியம் இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு கொடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவும், போராளிகளும் பொலனறுவை மாவட்டத்திலுள்ள வெலிகந்தைப் பொலிஸ் பிரிவுற்கு உட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுட்டுக் கொல்லபபட்டமை, கொடூரமான செயல.இதனை நாம் கடுமையாக கண்டிக்கின்றோம்.

சிறிலங்காவின் அரச பாதுகாப்பு பிரதேசத்தில் இடமபெற்ற இக்கொலைகளுக்கு அரச படைகளே பொறுபேற்கவேண்டும்.

கௌசல்யன் கடந்தவாரம் கிளிநொச்சிக்கு வருகை தந்து கடறகோள் அனர்த்தத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்தும் தலைமைப் பீடத்துடன் கலந்து ஆலோசனை செய்தார்.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் கிளிநொச்சிக்கு வருகைதந்து விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துடையாடியபோது அக்கலந்துரையாடலில் கௌசல்யன் அவர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் இருந்து மட்டக்களப்பிற்குத் திரும்பிச் சென்றபோது கௌசல்யனும், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவும், மூன்று போராளிகளும் படுகொலை செய்யப்பட்ட செயலானது முழுமையாக சிறிலங்காப்படையே பொறுப்பேக்க வேண்டிய ஒன்றாகும்.

கடற்கோள் பேரனர்த்தத்தினால் உயிரிழப்புக்களையும், உடமை இழப்புக்களையும் அடைந்துள்ள இவ்வேளை அந்தப் பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்கும் பணியிலேயே விடுதலைப்புலிகளின் உறுப்பினர் செயற்பட்டு வருகன்றமை அனைவரும் அறிந்ததே. கௌசல்யன் முழுமையாக அப்பணியிலேயே ஈடுபட்டு வந்தார்.

இச் சூழ்நிலையில் சம்பவம் இடம்பெற்று இருப்பது தமிழ மக்களை ஆழமாக கவலை கொள்ளச் செய்துள்ளதுடன் ஆத்திரம் அடையவும் செய்துள்ளது. இத்தகைய சம்பவம் தொடர்ந்து இடம்பெறுமானால் விடுதலைப புலிகள் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற கொள்ள மக்கள் நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டிய சூழ நிலை ஏற்படும் என்பதை வெகுசன அமைப்பு மிகுந்த வேதனையுடன் கூறிவைக்க விரும்புகின்றது.

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினராகிய நீங்கள் அக்கொலைகள் தொடர்பான பூரண விசாரனை நடாததி உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டுமென வெகுசன அமைப்பு தயவுடன் கேட்டுக்கொள்கின்றது. (ப4)

# அரச ஊழியர்களுக்கு சுயவிருப்பில் ஓய்வு

## அரசினால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

அரச ஊழியர்க்ள் சுய விரும்பத்தின் பேரில் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதற்கான சுற்று நிருபம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் சேவையில் எழுதுவினைஞர் உட்பட ஆறு பதவிகள் இர்த்துச் செய்யப் பட்டுள்ளன. இதற்குப் பதிலாக அரச முகாமைத்துவ சேவையினர் புதிய பதவியொன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி எழுதுவினைஞர்கள்,களஞ்சியப் பொறுப பாளர்,களஞ்சியக்காப்பாளர்,கணக்குப்பதிவாளர்கள் , தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் ஆகிய பதவிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் மார்ச்மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் புதிய பதவிக்கு சேர்த்துக்கொள்வது தொடர்பாக ஊழியர்கள் தமது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் அவ்வாறில்லாமல விருப்பத்தைத் தெரிவிக்கத் தவறும் பட்சத்தில் ஊழியாகள் அனைவரும் ஓய்வு பெற்றுச் செல்ல வேண்டிய நிலை ஏறபடும்என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

# பாதிக்கப்பட்ட 75 சதவீதமானோருக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது

## திலக் ரணவிராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களில் இதுவரை 75 சதவீதமானோருக்குத் தேவையான நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப்பணிகளை தாம் நினைத்தவாறு சீர்குலைக்கும் பிரதேச உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை முப்பது வீதமானோருக்கு மட்டுமே நிவாரணங்கள் வழங்கப் பட்டுள்ளதாகத் தான் தெரிவத்த கருத்து தவறான முறையில வரையறை செய்து விளக்கம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய நிவாரணப்பொருட்கள் விநியோகத்தின போது போதுமான அளவில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிவாரணங்கள் அனுப்பப்பட்ட போதிலும் அவை அந்தச் சந்தர்ப்பத்தில் முப்பது வீதமானோருக்கே கிடைத் திருப்பதாக முன்னர் தான் தெரிவித்திருப்பதாகவும் திலக் ரணவிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக அனுப்பப்பட்ட குடிநீர்,உணவு மற்றும் வைத்திய உதவிகள் உள்ளிட்ட நிவாரணங்கள் இந்த இடத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றும் அவர் மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ற-4)

# துருக்கிப் பிரதமர் இலங்கை வருகை

(கொழும்பு)

துருக்கியப்பிரதமர் ரேசிட் றக்றோகன் இன்று இலங்கை வரவுள்ளார். இவர் தனது விஜயத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

பின்னர் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட தென்மாகாணத்திற்கு விஜயம் செய்து சேதத்திற்குளளான பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளதுடன், நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள பாதிக்கப் பட்ட மக்களையும் பார்வையிட்டு அவர்களின் நிலைப் பாடுகளை கேட்டறியவுள்ளார். (ற)

# இலவச பஸ் சேவை

(மருதங்கேணி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வடமராட்சி கிழக்கு மக்களின் நன்மைகருதி இலவச பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சுனாமப் பேரலையினால் பெரும் பாதிப்புககுளளான வடராட்சி கிழக்கு மக்களுக்காகவே இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செம்பியன்பறறில் இருந்து புறப்பட்டு கட்டைக்காடு ஊடாக புதுக்காட்டுச்சந்தியை வந்தடைந்து,மீண்டும் அதே பாதையால் செமபியன்பற்றை வந்தடையும். (ப-35)

# கல்விசார் உபகரணங்கள் அன்பளிப்பு

மகளிர் அபிவிருத்தி நிலையம் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக வருடா வருடம் கல்விசார் உபகரணங்களை வழங்கிவருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இம்முறை வேலனை சைவப்பிரகாச விததியாலயத்தில் கல்விபயிலும் தரம் 1முதல் 9 வரையான மாணவர்களுக்கு பாடசாலைப்பை, சிறுவர் களுககான பயிற்சிப்புத்தகஙகள் மற்றும் சவர்க்காரம் ஆகிய பொருட்கள் நேற்றுமுன்தினம் வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் வைத்து மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் வழங்கப்பட்டது. (ற)

# படுக்கையில் சிறுநீர் கழிக்கும் குழந்தைகளின் பழக்கத்தை மாற்றமுடியுமா ?

குழந்தைகள் இரவில் தன்னிச்சையாக சிறுநீர் கழிக்கும் பழக்கம், பிறந்த ஒரு மாதத்திலிருந்து நான்கு வயதுவரை பெரும்பாலும் இருக்கும். சில சமயம் 18 வயது வரைகூட நீடிக்கக்கூடும். இது பொதுவாக தானாகவே சரியாகி விடுவதுண்டு: ஒரு சில குழந்தைகளுக்கு இடையில் சரியாகி மீண்டும் இரவில் படுக்கையில் சிறுநீர் கழிப்பதுண்டு. ரொம்பவும் அரிதாக சிலருக்கு பகலிலும் தானாகவே சிறுநீர் வெளியேறுவதுண்டு. இதற்கு சிறுநீர்ப்பையிலுள்ள தசைநார்கள் வலுவற்று இருப்பதனாலும் ஏற்படலாம்.

இப்பழக்கம் பெண்களிடையே அதிகமாகக் காணப்படுகிற ஒன்று. வாழ்நாள் முழுவதும் தொல்லை தரும் சிறுநீர்ப்பையின் குறைந்த கொள்ளளவு, சிறுநீர்ப்பை அழற்சி போன்றவை முக்கிய காரணங்களாகும். ஆனால் இதை ஒரு நோயாக எடுத்துக் கொள்ளக் கூடாது. சிறுநீர்ப்பையை அடக்கி ஆளும் முறையில் உள்ள மாறுபாடு என்றே கருதவேண்டும். சாதாரணமாக இம்மாறுபாட்டினால் குழந்தைகள் மனநிலையில் நலமாகவே இருப்பார்கள். ஆனால் பெற்றோர்கள் அதிக கவலையுடன் இருப்பார்கள்.

சிறுநீர்ப் பாதை நோய்கள், இரவுக் கனவுகள், மனப்போராட்டங்கள், மனக் கிளர்ச்சி, நீரிழிவு நோய், மூளைச் சிதைவு நோய்கள் போன்றவைகளும் காரணமாகக் கூடும்.

இப்பழக்கம் தானாகவே ஆறு வயதுக்குப் பின்னர் ஒவ்வோர் ஆண்டும் பதினைந்து வீதம் குணமடையும். இதுதவிர ஊக்குவிப்பு அறிவுரைகளால் 25 விழுக்காடும், சிறுநீர்ப்பை பயிற்சிகளால் 35 விழுக்காடும், இரவுச் சிறுநீர்க் கூக்குரல் மணியால் 75 வீதமும் மருந்துகளரல் 25 வீதமும் குணமாகும்.

### ஊக்குவித்தல்

ஊக்குவிப்பு அறிவுரைகளுடன் மருந்துகளும் அவசியம். அதாவது மருத்துவர் மருத்துவம் அளிக்கும் பொழுது மருத்துவரும் பெற்றோரும், குழந்தையிடம் இரவில் சிறுநீர் கழித்தல் பக்குவமடையாத சிறுநீர்ப்பை அல்லது சிறிய சிறுநீர்ப்பையால் தான் ஏற்பட்டுள்ளது என்று கூறி அவர்களின் குற்ற உணர்வைப் போக்கவேண்டும். மேலும் அப்பழக்கம் வேண்டுமென்றே செய்யக்கூடிய பழக்கம் இல்லை என்றும் கூறி, இது தானாகவே குணமாகக்கூடிய ஒன்று என்று உறுதியளிப்பது வெற்றிக்கு உதவும். இவ்வறிவுரைகள் நான்கு வயதிலிருந்த ஆறு வயதிற்குள் மிகுந்த பலனளிக்கும்.

இக குழந்தைகளுக்கு தூங்குவதற்கு மூன்று மணிநேரத்திற்கு முன்பிலிருந்து நீரும், நீராகாரங்களும் கொடுக்கக் கூடாது. இரவு தூங்குவதற்கு முன்னர் குழந்தைகளை சிறுநீர்கழிக்க அனுப்புதல் வேண்டும். இரவில் சிறுநீர்கழிக்காத நாட்களில் குழந்தையைப் பாராட்டிப் புகழ வேண்டும். பரிசுகள் கூட துணை புரியும். ஆனால் அதேசமயம் சிறுநீர் கழித்த இரவுகளுக்குத் தண்டனை என்பதை கனவிலும் நினைக்கக் கூடாது. ஏனெனில் இம்முறை வெற்றி அடைவதற்கு சில காலங்கள் பிடிக்கும். அதன் பின்னர் பயனும் முடிவும் நன்றாக அமைந்து மீண்டும் ஏற்படுவதையும் குறைக்கும்.

### சிறுநீர்ப்பை பயிற்சிகள்

சிறுநீர்ப் பையினை நன்கு விரிவடையச் செய்தல் நல்ல பயிற்சியாகும். பகல் நேரங்களில் குழந்தை எவ்வளவு நேரம் சிறுநீர்கழிக்காமல் தாங்கிக் கொள்ள முடிகிறதோ அவ்வளவு நேரம் தாங்கிக் கொள்ளுமாறு பழக்க வேண்டும். சிறுநீர்ப்பை நிரம்பியதை உணர்ந்தவுடனே சிறுநீர்கழிப்பதைத் தள்ளிப்போட்டு பையைவிரிவாக்க உதவவேண்டும். இதனைக் குழந்தையிடமே ஒரு குடுவையில் ஆரம்பத்தில் சிறுநீர் கழிக்கச் செய்து ஒவ்வொரு முறையும் அதன் அளவு கூடுதலாக்க முயற்சி எடுக்கச் சொல்லிக்கொடுக்கவேண்டும். இதைப் பகலில் பழகிக்கொள்ளுதல் மிகச் சிறந்தது. குழந்தைப்பருவத்தில். சிறுநீர்ப்பையின் கொள்திறன் ஒவ்வோர் ஆண்டும் 30-45 மி.லி ஆகும். (எ.கா) நான்கு வயதுக் குழந்தையின் கொள்ளளவு 120 இல்லிருந்து 180 மில்லிலீற்றராகும். பெரியவர்களின் கொள்ளளவு அதிகபட்சம 600 மில்லிலீற்றர் ஆகும். ஆகவே நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள் இரவில் படுக்கையை நினைப்பது ஓர் இயற்கை மாறுபாடே. நான்கு வயதிற்கு மேலும் இப் பழக்கம் தொடர்ந்தால் மருத்துவ உதவி பெறுவது அவசியம். இப பயிற்சியைப் பொதுவாக எட்டு வயதுவரை கொடுப்பது நல்லது.

சில சமயம் சிறுநீர்ப்பைக் கொள்திறன் உள்ள குழந்தைகளுக்கு இப் பழக்கம் இருப்பின் அவர்களுக்கு சிறுநீர் ஓட்டத் தடைப் பயிற்சிகளைப் பகலில் கற்பிக்கவேண்டும்.

அதிகமான அளவு நீர் மங்களைக் காலை நேரங்களில் அளிப்பது சிறுநீர்ப்பையின் கொள் அளவை அதிகப்படுத்தும். அதிகப்படியான சிறுநீர் உற்பத்தியாதல் குழந்தைகளுக்குச் சிறுநீர்ப்பையினை விரிவாக்கும் பயிற்சியையும் சிறுநீரோட்டத் தடைப்பயிற்சியினையும் செயல்படுத்த அதிக வாய்ப்பை அளிக்கும். திரவங்கள் கொடுப்பதை மதியவேளையில் இருந்தே குறைத்துக் கொள்ளவேண்டும்.

### இரவு சிறுநீர் கூக்குரல் மணிகள்

புதுமையான இரவுச் சிறுநீர்க்கூக்குரல் மணிகள் மேலை நாடுகளில் உள்ளது. இரவு நேரத்தில் குழந்தைக்குச் சிறுநீர் வருமபோது குழந்தையை இவை தூக்கத்திலிருந்து எழுப்பிவிடும். இவைகளை உள்ளாடைகளில் இணைத்துவடலாம். இவை சிறிய சிறு நீர்ப்பையினை விரிவாக்கும் பயற்சியினை கடைபிடித்து வரும குழந்தைகளுக்கு மிகவும் பயன்படும். இம்முறை எட்டு வயதிகுமேல் உதவும். இதுபோல இவ்வயதில் மருத்துவ முறைகளும் அவசியம்.

மேற்கூறிய முறைகளைவிட சிறந்த முறை, சிறந்த நண்பன் ஒரு குழந்தைக்கு அக் குழந்தையே தானாக மனத்தில் இருத்திக் கொள்ளும் எண்ணம் மிகவும் சிறந்தது. குழந்தை தூங்கப்போகும் முன் சிறுநீர் கழிக்க சிறுநீர் கழிக்கும் இடம் செல்லவேண்டும் என நினைவூட்டிக கொள்ள வேண்டும். தானே ஏற்படுத்திக் கொள்ளும் மன இணக்க முறை நாள்தோறும் இரவு நேரங்களில் 5 வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்குப் பயனுள்ளதாக அமையும். அவ்வப் பொழுது குழந்தையை எழுப்பிப் பொற்றோர்கள் கழிவறைக்கு அழைத்துச் சென்று சிறுநீர் கழிக்கச் செய்யவேண்டும்.

### மருத்துவ முறைகள்

சிறிய சிறுநீர்ப் பைகளை பொதாக்க பாதுகாப்பான மருந்துகள் இல்லை. பொதுவாக மருந்துகள் நல்ல நிலையில் கொள்ளளவு சாதாரண அளவு இருந்து இரவில் சிறுநீர்கழிக்கும் குழந்தைகளுக்கே மருந்துகள் உதவும். பயனைத் தரும் இதற்கு சிறுநீர்ப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் மருந்தும் சிறுநீர்ப் பையைத் தளர்த்தும் மருந்துகளும் தற்காலிகமாக ஓரளவு வெற்றியளிக்கும்.

ஒருமுறை மருத்துவம் வெற்றி பெற்று மீண்டும் இப் பழக்கம் ஏற்படுமாயின் மீண்டும் மருத்துவ முறைகளை தொடருதல் அவசியம். சில சமயம் 2,3 மாதங்களுக்குப் பிறகு எல்லா மருத்துவ முறைகளும் தோல்வியடைந்து மருத்துவருக்கும் பெற்றோருககும் எரிச்சலை ஏற்படுத்தும். இருப்பினும் மருத்துவத்தைத் தொடர்வது அவசியம். ஆனால் டிருந்தை மட்டும் தொடர்ந்து ஆண்டுக்கணக்கில் அளிக்க சில இடர்பாடுகள் குழந்தைக்குத் தோன்ற வாய்ப்பு உண்டு. ஆகவே எம்மருந்தையும தொடர்ந்து அளித்தல் கூடாது. பொதுவாக இக்குழந்தைகளுக்கு மனவளப்பயிற்சியுடன் ஊக்குவித்தல் இப் பழக்கத்திற்கான காரணத்தையும் களைவதே சிறந்த மருத்துவமாகும். □

**டாக்டர் எஸ்.நரேந்திரன்**

## நினைவு தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் சுனாமி அனர்த்தம் காரணமாக உயிரிழந்த இரண்டு முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி மாணவர்களினது நினைவு தினம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாணவர்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த இரண்டு முன்பள்ளி ஆசிரியர்களதும் மாணவர்களதும் படங்கள் வைக்கப்பட்டு இந்தப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ற-43)

## மட்டக்களப்பில் அஞ்சலி

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்ட- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட 4பேர் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் கறுப்பு, வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கடைகள், சந்தைக் கட்டடங்கள் உட்பட அநேகமான இடங்களில் கறுப்பு, வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. (ற-4)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சி.வித்தியாதரனின் 'சதுரங்கத்தில் இறுதியாட்டம்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ்.சதுரங்கச் சம்மேளனத் தலைவரும், யாழ்.பல்கலைக்கழக மெய்யிற்றுறை பேராசிரியருமான என்.ஞானக்குமாரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார். (ற)

## சிவதொண்டன் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்பபாணம் சிவதொண்டன் நிலையத்தினால் வெளியிடப்படும் 'சிவதொண்டன்' நூலின் தை-மாசி மாத இதழ் வெளிவந்துள்ளது. (ற)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீளக்குடியமர்த்தல் மாநாடு !

## அரச ஊழியருக்கு 'சுனாமி' கொடுப்பனவை உடன் வழங்குவது என்று முடிவு !

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராயும் முக்கிய மாநாடு ஒன்று நேற்று முன்தினம் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் பி.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இம் மாநட்டில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த சின்னப்பா மாஸ்ரர், பொருண்மிய மதியுரையகத் துணைப் பொறுப்பாளர் திலக் மற்றும் தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தைச் சேர்ந்த தாஸ், யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பணிப்பாளர் விஜிதரன், தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், நிதித் துறையைச் சேர்ந்த தாயகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாமுனையில் இருந்து சுண்டிக்குளம் வரையான பகுதியை மையமாக வைத்தே மருதங்கேணிப்பகுதியில் நவீனத்துவம் வாய்ந்த நகரம் ஒன்றை அமைத்தல் எனவும். இந்த நகரம் அமைத்தலுக்கான முன் முயற்சிகளை உடனடியாக எடுத்தல் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இந்த நகரமயமாக்கலுக்கு ஏற்ப அந்தப் பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் வீதியை 400 மீற்றருக்கு அப்பால் அமைத்தல். அதனைவிட மருதங்கேணிப் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய தொழில் நுட்பக்கல்லூரி ஒன்றினை அமைத்தல் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் வரணி மகாவித்தியாலயத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிப்படைந்து தங்கியுள்ள மக்களை மூன்று நாட்களில் தங்களுடைய சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்தல் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனைவிட அரச ஊழியர்கள் அனைவருக்கும் சுனாமி பாதிப்பு நிவாரணக் கொடுப்பனவை வழங்குவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

குறிப்பாக சுனாமி அனர்த்தம் காரணமாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு மட்டுமே இந்த சுனாமிப் பாதிப்பு நிவாரணக் கொடுப்பனவை உடனடியாக வழங்குவது எனவும் முடிவெடுக்கப்பட்டது. (இ-43-4-35)

## ஊருக்குள் முதலைகள்!

(கோண்டாவில்)

வரணிப் பகுதியிலுள்ள குளத்தில் இருந்து இரவு வேளைகளில் முதலைகள் அடிக்கடி வெளியே வந்து நடமாடுவதாகத் தெரிய வருகின்றது.

வரணி இடைக்குறிச்சிப் பகுதிக்குளம் ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் அதாவது 3 1/2 அடிநீளமான முதலை ஒன்று வெளியேறி ஊர்ப்பகுதியில் நடமாடியுள்ளது.

நாய்கள் இதனைப் பின் தொடந்து சென்று குரைத்ததையடுத்து இதனை அவதானித்த அவ்வூர் மக்கள் கோடரியால் முதலையைத் தாக்கிக் கொன்றுள்ளனர். (ற-130)

## முஸ்லிம் உரிமைகளை கௌசல்யன் இதயசுத்தியுடன் கையாண்டவர்

### முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் அறிக்கை

(கல்முனை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யனின் மரணம் குறித்து ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் அனுதாப அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பல வருடங்களாக சிதைந்து போய்க் கிடந்த தமிழ் - முஸ்லிம் இன உறவைக் கட்டியெழுப்பும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குத் தன்னாலான பங்களிப்பை செய்து அதனை அமுல்படுத்தி வரும் வேளையில் அவரது இந்த அகால மரணம் எமக்குக் கவலையையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது. முஸ்லிம்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஆரம்பம் முதல் இறுதி மூச்சு வரை இதய சுத்தியோடு ஈடுபட்டவர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ப)

# கௌசல்யன் குழுவினர் கொல்லப்பட முன்னரே இறந்தவர் பட்டியல் வெளியிடப்பட்டுவிட்டது

## படையினரின் நடவடிக்கைகள் பற்றி அதிர்ச்சித் தகவல்

(மட்டக்களப்பு)

**மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் மீதும் அவர்கள் பயணம் செய்த வாகனம் மீதும் தாக்குதல் நடாத்தப்படுவதற்கு முதல் இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரே கௌசல்யன் உட்பட மூன்று போராளிகள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்புச் செய்திகள் வெளியாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மதிமாறன், குமணன் ஆகியோர் கருணா குழுவினரால் கொல்லப்பட்டதாக அரச இராணுவத் தரப்பினர் ஆங்கில ஊடகங்களுக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இத்தகவல் இலங்கை நேரம் பிற்பகல் 6 மணியளவில் பரிமாறப்பட்டது. அதே நேரம் கௌசல்யனுடன் இறந்த போராளிகளின் பெயர் வேறாகவே இருந்தது. எனினும் மட்டு. - அம்பாறை அரசியல் துறைப பொறுப்பாளர் கௌசல்யன் பயணம் செய்த வாகனம் இரவு 7.45 மணியளவில் தாக்குதலுக்கு உள்ளானதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இன்னொருவர் இறந்ததாகவும் இராணுவம் தகவல்களை வெளியிட்டிருந்தது.

சமாதான காலத்தில் ஒருதலைப்பட்சமான மறைவு யுத்தத்தை கிழக்கு மாகாணத்தில் கட்டவிழ்த்து நாடத்திவரும் இலங்கையரசு அதனை கருணா குழு என்று கூறி அரசியல் மற்றும் இராணுவ நலன் தேடிவருவதுடன், பல போராளிகள் இக்காலப்பகுதியில் இராணுவத்தால் கொலை செய்யப்படுவதற்கு முதல் கொலைசெய்யப்பட்டு விட்டதாக ஊடகங்கள் ஊடாக செய்தி வெளியிட்டு வருவதுடன் அதேபோல இந்த சம்பவத்தையும் கையாண்டுள்ளது.

இதேநேரம் இக்கொலையினை கருணா குழு என்ற பெயரில் இயங்கும் இராணுவ அதிரடிப்படையினரின் விசேட தாக்குதல் பிரிவினர் செய்தனர் என்பதை வெளிப்படையாக இலங்கை அரச பணத்தில் ஜேர்மனியில் இருந்து இயங்கும் தமிழ்த் தேசவிரோத இணையமொனறு உறுதிப்படுத்தியுள்ளது. (ப-4)

# நினைவு தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகத்தலைவர்களில் ஒருவரும் சட்டமாமேதையுமான ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 28வது நினைவு தினம் நேற்று புதன் கிழமை காலை 9மணியளவில் யாழ். மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் தலைமையில் அவரது அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்னாரது உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மாலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஆதாரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர். (ற)

# மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து யாழ். செயலக மாநாட்டில் விரிவாக ஆராய்வு

(திருநெல்வேலி)

வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக ஆராயும் மாநாடு ஒன்று யாழ். அரச செயலகத்தில் நேற்று முன்தினம் பி.ப. 3.00 மணிக்கு யாழ். அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் சுனாமி அனர்த்தத்தினால் மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

சுனாமி அனர்த்தக் கூட்டுச் செயலணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் பாலையா கடற்றொழிலாளர் சம்மேளன சங்கத்தின் மேலாளர் அங்கையழகன் மற்றும் சமாச நிர்வாகிகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் மணற்காட்டுப் பகுதியைப் புனரமைததல் மற்றும் தும்பளையில் இருந்து தொண்டைமானாறு வரையிலான பகுதிகளை மையமாக வைத்து மீனவர்களின் வசதிக்கேற்ப வான்களைத் தோண்டுதல் மற்றும் ஆழ்கடல் மீன் பிடியை நவீனமயப்படுத்தல் மற்றும் வலிகாமம் பகுதி மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கை என்பன தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. (ற-43)

# முகமாலை சோதனை நிலையத்தில் புதிய கட்டடம் நிர்மாணம்






(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவதற்குப் பிரதான சோதனை நிலையமான முகமாலை சோதனை நிலையம் தற்போது முக்கிய இடத்தைவகிக்கின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை எடுத்து வருவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால் தினந்தோறும் முகமாலைச் சோதனைச் சாவடியூடாகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் பயணம் செய்கின்றனர்.

யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் முகமாலை சோதனை நிலையம் ஒரு முக்கியமான இடமாகக் கருதப்படுகின்றது. இந்த இடத்தில் ஆரம்பத்தில் பயணிகளை சோதனை செய்யவும் பொருட்களை சோதனையிடவும் அமைக்கப்பட்ட தற்காலிகக் கூடங்கள் பழுதடைந்துள்ளதுடன் தற்போது யாழ்ப்பாணத்திற்கு வரும் மக்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியே செல்லும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால் இங்கு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக 55வது சேனையகத்தின் கட்டளைத்தளபதி யாழ். மாவட்ட இராணுவக் களபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனிடம் தெரிவித்தார்.

55வது சேனையக கட்டளைத் தளபதியின் ஆலோசனையை மேஜர் ஜெனரல் சுனில தென்னககோன் யாழ். அரச அதிபர் கே.கணேஸிடம் தெரிவித்ததையடுத்து, முகமாலை சோதனை நிலையத்தில் புதிய கட்டடங்களை அமைப்பதற்குத் தேவையான பொருட்களை வழங்க அரசாங்க அதிபர் இணக்கம் தெரிவித்தார்.

இந்தக் கட்டடங்களை அமைப்பதற்கு கட்டட நிர்மாண ஆலோசனைகள் மற்றும் கட்டட அமைப்புப் பணிகளை இராணுவத்தினர் மேற்கொள்ளவிருப்பதுடன் இப்பணிகள் 55வது சேனாதிபதியின் வழிகாட்டல்களுக்கமைய மேற்கொள்ளப்படும் இந்தக் கட்டட நிர்மாணப்பணிகள் முடிவடைந்ததும் பொருட்களை எடுத்துவரும் வாகன உரிமையாளர்கள் மற்றும், பொது மக்களும் இதனைப் பயன்படுத்த முடியும். இதனால் மக்கள் எவ்வித இடையூறுகளு மின்றித் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த 7 ஆம் திகதி காலை 9.32க்கு இடம்பெற்றது. இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை 55வது சேனாதிபதி மேஜர் ஜெனரல் வி.ஆர்.சில்வா நாட்டிவைத்தார்.இந்த அடிக்கல் நாட்டு நிகழ்வில் 553வது படையணியின் கட்டளையிடும் அதிகாரி கேணல் ஏ.எம். பெரேரா,அப்பிரதேச இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் கலந்து கொண்டனர். (ற)

# கௌசல்யனின் கொலைக்கும் கருணா குழுவிற்கும் தொடர்பு

## படைத்தரப்பினர் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலை தொடர்பாக பாதுகாப்புப் பிரிவினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை தாம் நிராகரிப்பதாக சிறீ லங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் படுகொலையுடன் கருணா குழுவினருக்குத் தொடர்பு இருக்கக்கூடும் என்று சந்தேகிக்க போதிய காரணங்கள் இருப்பதாக் தயா ரட்நாயக்க கூறினார். மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் வெலிக்கந்தை ஊடாக மேற்கொண்ட பயணம் தொடர்பாக இராணுவத்தினருக்கு அறிவிக்கவில்லை என்றும், இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிராந்தியத தலைவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பயணித்த வேளைகளில இராணுவத்தினருக்கு அறிவித்தபோது, அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்பட்டதாக பிரிகேடியர் தயா ரட்நாயக்க மேலும் தொிவித்துள்ளார். (ப)

# புலிகள் மீதான தாக்குதல் சமாதானத்தைப் பாதிக்கும்

## தமிழ்க் கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட போராளிகள் படுகொலை செய்யப்பட்டமை சமாதான நடவடிக்கைகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இப்படுகொலைச்சம்பவம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்றிருப்பதாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிராயுதபாணிகள் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டமை அபாயகரமானதும் கவலைக்குரியதுமான சம்பவமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இக்கொலைகளுக்கு அரசும் பாதுகாப்புப் படையினரும் பொறுப்பேற்க வேண்டுமென்று கூறியுள்ள அவர் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றிருப்பது குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (இ-4,7)

# தூரப்பயணம்



இப்போதெல்லாம் முன்பு போலில்லை. மக்கள் விடுமுறை தினங்களில் வெளியு,ர்களுக்கு சுற்றுலா செல்கிறார்கள். முடிந்தவர்கள் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்கிறார்கள். மேலும் பலர் புனிதயாத்திரை மேற்கொண்டு இந்தியா, நேபாளம், சவு,தி அரேபியா போன்ற நாடுகளுக்கு சென்று வருகிறார்கள்.

வெளியு,ர் அல்லது யாத்திரை செல்பவர்கள் மீண்டும் வீடு திரும்பும் வரை தமது உடல் நலத்தைப் பேண வேண்டியது அவசியம். இல்லையேல் பயணம் சிக்கல் நிரம்பியதாகிவிடும். எனவே பயணிகள் சில விஷயங்களில் கவனமாக இருக்கவேண்டும்.

உணவு விஷயத்தை எடுத்துக்கொண்டோமானால் இவர்கள் பச்சை காய்கறிகளை உண்ணக்கூடாது. பழங்களையும் நன்றாகக் கழுவி அல்லது சுடுநீரில் அலசிய பின்னரே உண்ணவேண்டும். தோல் வெடித்து பிளந்திருந்தால் சாப்பிட வேண்டாம்.

ஹோட்டல்களில் சாப்பிடுபவர்கள் புதிதாக சமைக்கப்பட்ட சூடான உணவுகளையே உண்ண வேண்டும். ஆறிய மாமிச உணவுகளைத் தவிர்த்துவிடுங்கள். நீங்கள் சென்ற இடத்தையும் உணவகங்களின் தன்மையையும் கவனத்தில் கொண்டு அவசியமானால் மாமிசத்தை தவிர்த்துவிடுவது நல்லது. நண்டு இறால் போன்ற கடல் உணவுகளையும் நீங்கள் சாப்பிடும் இடத்தைப் பொறுத்ததாக தவிர்த்துவிடுதல் நன்று. சந்தேகம் ஏற்படுமானால் பாலுணவுகளையும் தவிர்த்துவிடுங்கள்.

அடுத்ததாக தண்ணீர். பலரைத் தண்ணீர் சிக்கலில் மாட்டி பயணத்தை நரக வேதனையாக்கிவிடும். எனவே நீங்கள் அருந்தும் தண்ணீரில் கவனமாக இருங்கள். ஊர் சுற்றிப் பார்ப்பதற்காக வெளியே செல்லும்போது மறக்காமல்

# போகும்போது...

தண்ணீரைக் கையோடு கொண்டு செல்லுங்கள். ஹோட்டல்களில் தரப்படும் கிளாஸ் மற்றும் தட்டுகள் சுத்தமானவையா என்பதை நிச்சயம் செய்யுங்கள். போத்தலில் அடைக்கப்படாத குறிப்பாக தெருவோரக் கடைகளில் விற்கப்படும் குளிர் பானங்களை அருந்தவேண்டாம். நோய்க்கிருமிகள் நேரடியாகத் தொற்றக்கூடிய வாய்ப்பை இது அளிக்கிறது.

நீண்டதூர பயணத்தை மேற்கொள்வதனால் டாக்டரிடம் ஒரு முறைசென்று முன்னெச்சரிக்கையாக என்னென்ன மருந்துகளை கையோடு வைத்திருக்கலாம் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். வலி நிவாரண மாத்திரைகள், பாம் என்பவற்றைச் கொண்டு செல்லுங்கள். செல்லுமிடம் குளிர் பிரதேசமானால் முன் ஆயத்தங்களை செய்து கொள்வது நல்லது. குடும்பத்தோடு பயணம் செய்யும்போது இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

# ஐயங்கள் ஆயிரம் தும்மல் ஏற்படுவது எதனால்?

நாம் உணவாக உட்கொள்ளும் உணவின் அளவு நாளுக்கு ஒரு கிலோதான். தண்ணீராக எடுத்துக்கொள்வது ஒன்றரை லீற்றர்தான், ஆனால் சுவாசமாக நாம் உள்ளே எடுத்துக் கொள்வது ஆயிரம் லீற்றர்களுக்குமேல் அசுத்தமான பொருட்கள் சுவாசம் வழியாகத்தான் நம் உடலினுள்ளே நுழை கிறது.

மேலும் வயிற்றில் இயல்பாகவே அமிலமும், கெட்டியான கோழையும் இருப்பதால் பாதுகாப்பு அதிகம். சுவாச உறுப்புகளில் மூக்குக்குத்தான் அதிக பொறுப்புள்ளது. காற்றில் உள்ள தூசிகளை உள்ளே போகவிடாமல் சளி ஒட்டி நிறுத்திவிடுகிறது. மேலும் அங்குள்ள சிறுரோமங்கள் தூங்கும்போது பூச்சிகள் போய்விடாமல் தடுக்கிறது. இப்படி எல்லாம் சகல பாதுகாப்புகள் இருந்தும் மிளகாய்நெடி, வைரஸ் கிருமி போன்றவை நுழைந்துவிட்டால் ஜெட் வேகத்தில் அவற்றை உதறித் தள்ளுவதற்கு உபயோகமாகவே தும்பல் வெடிக்கிறது.

திடீரென்று தும்மல் வந்துவிட்டால் ஆபத்து. எனவே தான் தும்மல் வருதற்கு முன் ஒரு குறுகுறுப்பு எச்சரிக்கையைத் தருகிறது. இல்லாவிட்டால் திருடனை தேள் கொட்டியது போலல்லவா இது காட்டிக் கொடுத்துவிடும்.

# 10-10இன் பின்னணி என்ன?

கடிகார விளம்பரங்களில் மணி 10.10 என்பதை குறிப்பது போல அமைந்திருப்பதன் பின்னணி என்ன தெரியுமா?

இது சரித்திரப்புகழ் பெற்ற ஒரு சம்பவத்தை பொதுமக்களுக்கு நினைவுபடுத்துகிறது.

அதாவது 10.10 என்பது ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்ட நேரத்தைக் குறிக்கிறது. அடிமை விலங்கை ஒடித்த ஆபிரகாம் லிங்கனுக்கு கடிகாரக் கம்பனியினர் செலுத்தும் மறைமுக அஞ்சலி இது!




சீனப் புத்தாண்டையொட்டி தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெறும் கைவினைப் பொருள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள அதிர்ஷ்ட பொம்மைகள்தான் இவை. புத்தாண்டில் இந்தப் பொம்மைகளை வாங்கினால் அதிர்ஷ்டம் ஏற்படும் என்று சீனர்கள் நம்புகின்றனர்.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 47

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

முன்னணி கதாநாயகன்களில் ஒருவரான இவர் அண்மையில் 'பிதா'வுக்காக விருது பெற்றவர். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.



நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 47**
**வலம்புரி ~ சங்குநாதம்**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக் கொள்ளவும்.

***இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-47***

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முகவரி | :-........................ |
| | ........................ |
| | ........................ |

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 45 சரியான விடை**





**நடிகை லைலா**

## இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 45இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம

| | |
|---|---|
| முதற் பரிசு | :~க.கஜானன், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி. |
| இரண்டாம் பரிசு | :~க.மனோகரன், பாடசாலை வீதி, நாவற்குழி, கைதடி. |
| மூன்றாம் பரிசு | :சி.விஸ்ணுகா, ரவி இல்லம், கரவெட்டி வடக்கு, வதிரி. |

## சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

செ.பங்குஷா, நீர்வேலி. ஏ.சர்மிளா, அரியாலை. ம.மைதிலி, கோண்டாவில். K.டக்லஸ்ருபன், குருநகர். சூ.யோ.மரியடாசன் அளவெட்டி. பொன், குணரத்தினம், குருநகர். சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். இ.வதனி, வட்டுக்கோட்டை. வி.இளங்கோ, கோப்பாய். த.மாலினி, சித்தன்கேணி. ம.பவித்திரா ஊர்காவற்றுறை. க.கவிதாயினி, கொட்டடி. க.கலியுகதாசன், கொழும்புத்துறை. ஆ.அனுஷா, சித்தங்கேணி. மா.பரம்சோதி, கல்வியங்காடு. எஸ்.விதுஷன், வண்ணார்பண்ணை. த.கவியரசி, ஏழாலை. லோ.அபிராமி, வல்வெட்டி. A.அனித்தா, வடலியூர். பா.கல்யாணி, வட்டுக்கோட்டை. த.கல்பனா, சுன்னாகம். ம.மாதினி, சாவகச்சேரி. க.சர்வோதயன், மட்டுவில். க.லுகிர்தன், திருநெல்வேலி. சு.நிகேதினி, வண்ணார்பண்ணை. ந.நடராஜன், கட்டுடை. எஸ்.கஜராம், உடுவில். க.தர்மதாசன், கரவெட்டி. க.தரன் , இணுவில். மா.சிவராசா, மல்லாகம். ந.நடராசா, கல்வியங்காடு. க.மயிலாஷினி, மருதனார்மடம். ப.திவ்வியா, அச்சுவேலி. சி.சுரேஸ்குமார், மல்லாகம். ம.மயில்வாகனம், ஆனைக்கோட்டை. அ.கஜந்தினி, வடலியூர். த.வள்ளியம்மை, புத்தூர். ந.கௌசல்யா, உடுப்பிட்டி. த.கம்ஷத்வதனி, அராலி.

# இராணுவச் சீருடை தரித்த துரோகக் கும்பலே புலிகளின் வாகனம்மீது தாக்குதல் நடத்தியது

## சம்பவத்திற்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும் என்கிறார் தயாமோகன்

விடுதலைப் புலிப் போராளிகள் பயணம் செய்த வாகனம மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் இராணுவச் சீருடை தரித்த தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட நிர்வாகதுறைப் பொறுப்பாளர் தயா மோகன் கருத்து வெளியிட்டுள்ளார்.

பொலநறுவை மாவட்ட வெலிக்கந்தை சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், இராணுவ ஒத்துழைப்புடன் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதால் இதற்கான பொறுப்பை சிறீலங்கா இராணுவம் தான் எற்க வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில ஏற்கனவே இப்படியான பல சம்பவங்கள் இடம்பெற்று வருவது குறித்து இராணுவத்தின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வந்துள்ளோம். சந்திப்புகளின் போதும் பல முறை பேசியுள்ளோம். அப்படியிருந்தும் இப்படியான போர நிறுத்த மீறல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற சம்பவமானது பாரிய போர் நிறுத்த மீறலாகும் என்று கூறினார்.

இப்படியான பயணங்களின் போது விடுதலைப்புலிகள், இராணுவத்தின் பாதுகாப்பை நாடத் தவறிவிட்டதாக இராணுவத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்டுள்ள கருத்து குறித்து அவரிடம் கேட்ட போது, இராணுவ சோதனைச் சாவடிகளில் பதிவு செய்துதான் இந்தப் பயணங்களை எமது போராளிகள் மேற்கொள்கின்றார்கள். அப்படி பதியாமல் இப்படியான பயணங்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாக மேற்கொள்ள முடியாது.

மட்டக்களப்பு ஓட்டமாவடியிலும், வவுனியா ஓமந்தையிலும இப்படியான பதிவுகள் செய்யப்படுகின்றன. இந்நிலையில் இராணுவத்திற்குத் தெரியாமல இப்படியான பயணங்கள் நாங்கள் மேற்கொள்வதாகக் கூறும் குற்றச்சாட்டுக்களை ஏற்க முடியாது என குறிப்பிட்டு, தலைமைப் பீடத்தின் அழைப்பு வரும் போது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணை, இராணுவப் பாதுகாப்பு ஆகியவற்றைக் கோரினால் உரிய நேரத்தில், உரிய முறையில் அவை கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தார். (ப)

## 3பிரேரணைகள் நிறைவேற்றம்

(கொழும்பு)

நிதித்துறை தொடர்பான மூன்று பிரேரணைகள் வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நிறைவேற்றுப்பட்டுள்ளன.

அபராதப்பணத்தை அதிகரித்தல், பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினை மறுசீரமைத்தல் உள்ளிட்ட மூன்று பிரேரணைகளே நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தப் பிரேரணைகளை நிதியமைச்சின் சார்பில் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். (ற-4)

## ஞானச்சுடர் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

சநநிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடரின் தை மாத மலர் வெளிவந்துள்ளது. (ற)

# பின்தொடர்ந்து வந்தவர்களே வாகனத்தை வழிமறித்துத் தாக்கினர்

## வெலிகந்த சூட்டுச் சம்பவத்தில் மீண்டவர் தகவல்

தாஙகள் பயணித்த வாகனத்தைப் பின்தொடர்ந்து இராணுவச் சீருடையில் வந்தவர்களே தாக்குதலை மேற்கொண்டதாக உயிர்தப்பிய போராளி தெரிவித்துள்ளதாக தமிழ்நெட் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி காயமடைந்த போராளியின் தகவலின்படி, தாங்கள் பயணித்த வாகனத்தைப் பின்தொடர்ந்து வந்த வான் ஒன்று ஆளரவமற்ற பிரதேசத்தில் தங்களுடைய வாகனத்தை முன்னோக்கி சென்று, தங்களது வாகனத்திற்கு குறுக்கே நிறுத்தப்பட்டதாகவும்,மேற்படி வாகனத்தில் வந்த அனைவரும் இராணுவச் சீருடையில் இருந்ததாகவும், அவர்கள் தங்களுடைய வாகனத்தில் வந்த அனைவரையும் இறங்குமாறு பணித்ததாகத் தெரிவித்ததோடு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அரியநாயகம் சந்திர நேருவின் பாதுகாப்பிற்கென வந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் மேற்படி நபர்கள் இராணுவச் சீருடையில் இருந்ததால் எந்த எதிர்ப்பும் காட்டவில்லையென்றும் தெரிவித்துள்ளார். (ப்)

# கௌசல்யன் குழு பயணித்த வாகனம்மீது அதிரடிப் படையினரே தாக்குதல் நடத்தினர்


## சம்பவத்தை நேரில் கண்டோர் பரபரப்புத் தகவல்

விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை. அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் பயணம் செய்த வாகனத்தின் மீது தாக்குதல் நடாத்திய இராணுவ உளவுப் பிரிவினர் வீதியோரத்தில் கொல்லப்பட்டவர்களையும் சேதமடைந்த வாகனத்தையும் உடனடியாக அப்புறப்படுத்தியதுடன அந்த வீதியூடாகப் பொது மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளையும் துரிதகதியில் மேற்கொண்டனர். இவ்வாறு சம்பவம் நடந்த நேரத்தில் லொறியொன்றில் பயணம் செய்தவர் பொலிஸாருக்கு வாக்கு மூலம் கொடுததாக அறியமுடிகிறது.

இத்தாக்குதல் நடாத்தப்பட்ட இடத்திலிருந்து சுமார் 300 மீற்றா துாரத்தில் இராணுவ அதிரடிப்படையினரின் நிலைகள காணப்படுவதாகவும் இத்தாக்குதலை இராணுவ அதிரடிப்படையினரே மேற்கொண்டதாகவும், தாக்குதலை நடாத்திவிட்டு கொல்லப்பட்டவர்களையும் காயப்பட்டவர்களையும் உடனடியாக அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டதாகவும் நேரில் கண்டவர்கள் பலா தெரிவிக்கின்றார்கள். சுமார் 100 அதிரடிப்படையினா பொதுமக்கள் போன்று சிவில் உடையில சம்பவம் நடைபெற்ற ஒரு சில வினாடிகளில் அந்த இடத்தில் காணப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ப-4)

# டேவிஸ் கோப்பைத் தொடரில் மீண்டும் ஆந்ரே அகாசி

அமெரிக்காவின் முன்னணி டெனனிஸ் வீரர் ஆநரே அகாசி



ஐந்து வருடங்களுக்குப் பின்னர், டேவிஸ் கோப்பை டென் னிஸ் தொடரில் பங்கேற்கவுள்ளார்.

கிராண்டஸ்லாம் போட்டிகளில் அக்கறை செலுத்தும் நோக்கில் டேவிஸ் கோப்பைப் போட்டிகளில் பங்கேற்பதை 2000ஆண்டில் அகாசி இடைநிறுத்தியிருந்தார். இப்போது மீணடும் இப்போட்டிகளில் களமிறங்கவுள்ளாா.

டேவிஸ் தொடருக்கான அமெரிக்க அணித்தலைவர் பற்றிக் மெக்கென்ரோ அகாசியை மீண்டும் விளையாட அழைத்து வந்திருக்கிறாா.

இதுவரை 31முறை டேவிஸ் கோப்பையை வென்றுள்ள அமெரிக்கா 1995க்குப் பிறகு கோப்பையை வெல்லவில்லை.

இவ்வருட டேவிஸ் கோப்பைத் தொடரின் முதல்சுற்று அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை கார்ஸன் நகரில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் குரோஷிய அணிககெதிரான சுற்றில் அகர்சி விளையாடவுள்ளார் என்று அமெரிக்க டென்னிஸ் சங்கம் அறிவித்திருக்கிறது.

அமெரிக்க டென்னிஸ் தலைவர் மெக்கன்ரோ உட்பட அணி வீரர்கள் அனைவரும் என்னை ஊக்குவித்தனாலேயே இவ்வருடம் டேவிஸ் கோப்பைத் தொடரில் பங்கேற்க முடிவுசெய்துள்ளேன் எனக் கூறியுள்ள அகாசி இத்தொடரின் இரட்டையர் பிரிவில் அண்டி ரோடிக்குடன் சேர்ந்து களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)

## விளையாட்டுச் செய்திகள்

# சூப்பர் சீரீஸ் தொடரில் ஆஸி. அணிக்கே வாய்ப்பு

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தரவரிசையில் முதலிடம் வகிக்கும் அவுஸ்திரேலியாவுக்கு "சூப்பர் சீரிஸ்' தொடரில் உலக லெவன் அணியுடன் மோதும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

சர்வதேச கிரிக்கெற் சபையான ஐ.சி.சி.தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதன்படி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் முதலிடம் வகிக்கும் அணியுடன் 'உலக லெவன்' அணி மோதும் 'சூப்பர் சீரிஸ்' தொடர் அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொடரில் 3 ஒருநாள் போட்டிகளும் ஒரு டெஸ்ட் போட்டியும் நடைபெறவுள்ளது. தற்போது அவுஸ்திரேலிய அணி 137புள்ளிகளுடன் முதலிடத்திலும் நியூசிலாந்து 120 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் உள்ளன. இந்த இரு அணிகளும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் மோதவுள்ளன. இவற்றில் அனைத்துப் போட்டிகளிலும் நியூசிலாந்து வெற்றி பெற்றாலும் அவுஸ்திரேலிய அணியை முந்த முடியாது. தரவரிசைப் பட்டியலின் கணிப்பீட்டின்படி இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை அணிகள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே 'சூப்பர் சீரிஸ்' போட்டியில் பங்கு பற்றும் அணி தெரிவு செய்யப்படும்.

அவுஸ்திரேலிய அணியே தெரிவுசெய்யப்படுமென ஐ.சி.சி. உறுதியாகக் கூறியுள்ளது. 'சுப்பர் சீரிஸ்' தொடர் இவ்வருடம ஒக்டோபர் மாதத்தில் மெல்பேர்னில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)



பாரிசில் நடைபெற்ற 78 கி., பரிவு ஜூடோ சாம்பயன்ஷிப்இறுதிப் போட்டியில்,ஜப்பான் வீராங்கனை மகி சுகாடாவின் பிடியில் சிக்கித் தவிக்கிறார் பிரான்சைச்சேர்ந்த அன்னேசோப மான்டியர். இந்த போட்டியில் சுகாடா வென்று தங்கப்பதக்கத்தைத் தட்டிச் சென்றார்.

# ஆஸி. வீரர் அன்ரூ சைமன்ஸ் குணமடைந்து வருகிறார்

வி.பி.முத்தரப்புத் தொடரில் காயமடைந்த அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் சகல துறை ஆட்டக்காரர் அன்டரூ சைமன்ஸ் தற்போது குணமடைந்து வருகிறார்.

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இறுதிப் போட்டியின் போது கணுக்காலில் காயமடைந்த சைமன்ஸ் இரண்டாவது இறுதிப் போட்டியில் விளையாடவில்லை.

தற்போது குணமடைந்து வருவதால் அடுத்தமாதம் நியூசிலாந்துக்கு எதிராக இடம் பெறவுள்ள ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் சைமன்ஸூம் பங்குபற்ற வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

எனினும் அடுத்தவாரம் நடைபெறவுள்ள மருத்துவச் சோதனையில் அவர் தகுதி பெறுவதைப் பொறுத்தே போட்டிகளில் பங்கேற்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படுமென அவுஸதிரேலிய கிரிக்கெற் அணி மருத்துவர் ரேவர் ஜேம்ஸ் தெரிவித்துள்ளார். (து-7)

# சேவியர் மெலிஷா சம்பியன்

அமெரிக்காவில் புளோரிடாவில நடைபெற்ற மில்லேனியம் சர்வதேச டென்னிஸ் வல்லுநர்கள் போட்டிகளில் பெல்ஜியத்தைச் சேர்ந்த சேவியர் மெலிஷா சம்பியனானார்.

3 இலட்சம் அமெரிக்க டொலர்களைப் பணப் பரிசாகக் கொண்ட இப்போட்டித் தொடரின இறுதிப் போட்டியில் செக்குடியரசு வீரரான ஜெரிநோவாக்கை இரண்டு நேர்செட்களில் வெற்றிகொண்டு மெலிஷா சம்பியன பட்டத்தைத் தனதாக்கிக்கொணடுள்ளார். (து-7)

# மீண்டும் சுனாமி தாக்குவதற்கான நேரம் நெருங்குகிறது
## வானிலை ஆராய்ச்சி நிபுணர் எச்சரிக்கை

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரலை தாக்குதலில் தமிழ்நாடு உட்பட தென் இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளில் பேரழிவு ஏற்பட்டது. அதன் தாக்கத்தில் இருந்து இன்னும் முழுமையாக விடுபடாத நிலையில், மீண்டும அதே போன்ற சுனாமி தாக்குதல் நெருங்கி வருவதாக சர்வதேச வானிலை ஆராய்ச்சி நிபுணர் தேவ்கிரிக்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொல்கத்தா 'பிரிட்டிஷ் கவுன்சில்' சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட கிரிக்ஸ், 'ஹேட்லி' வானிலை ஆராய்ச்சி மையத்தின் இயக்குனராகப பதவிவகித்து வருகிறார்.

'மீண்டும் ஒரு சுனாமி தாக்குதலை நாம் சந்திக்கவேண்டிய நேரம் நெருங்கி வருகிறது. எப்போது இந்தத தாக்குதல் ஏற்படும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது என்றாலும், கடல் மட்டம் உயர்ந்து வருவது, அடுத்த சுனாமி தாக்குதல் நிச்சயம் என்பதற்கு கட்டியம்கூறுவதாக அமைந்துள்ளது. புயல் போன்ற சமயங்களில் அலைகளின் உயரமும், வேகமும் அதிகரிக்கும். அடுத்த 50 ஆண்டு காலத்துக்குள், வங்காளவிரிகுடாக் கடல் விரிவடைந்து கொல்கத்தாவை மிக நெருங்கி வந்துவிடும்.

கடந்த 1990 ஆம் ஆண்டில இருந்து உலகின் வெப்பநிலை 0.7டிகிரி சென்டிகிரேட் உயர்ந்துள்ளது. காபனீரொட்சைட்டின் வெளியேற்றம் 12 மடங்கு அதிகரித்துள்ளது. 2045 ஆம் ஆண்டில் உலகின் வெப்பநிலை 2டிகிரி சென்டிகிரேட் அளவுக்கு உயரக்கூடும்.

இதன்மூலம் உலக அளவில் ஒரு மீற்றர் அளவுக்கு கடல் மட்டம் அதிகரிக்கும். இதனால் தெற்கு வங்காளம் உட்பட இந்திய கடலோரத்தில பெரும் பகுதியை கடல் விழுங்கிவிடும் ஆபத்து உள்ளது'.

இவ்வாறு வானிலை ஆராய்ச்சி நிபுணர் தேவ் கிரிக்ஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (து)



வாஷிங்டனில் தேசிய வனவிலங்குகள் பூங்காவில் பராமரிக்கப்படடுவரும் சிறுத்தைப் புலி 4 குட்டிகளை ஈன்றது. நான்கு குட்டிகளுமே தற்போது தலா 10 பௌண்ட் எடையுடன் ஆரோக்கியமாக உள்ளன. இவைகளைப் பார்க்க நேற்று முன்தினம் முதல் முறையாக பார்வையாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டது. 2 குட்டிகளுடன் தாய் சிறுத்தை புலி.

# உள்ளாடையில் சிவன் உருவம்
## அமெ. இந்துக்கள் கண்டனம்

அமெரிக்காவில் பெண்களின் உள்ளாடையில் சிவனின் உருவம் அச்சடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்கு அமெரிக்க வாழ் இந்துகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் 'கேப்பிரஸ் டாட காம்' என்ற ஆன்லைன் கடையில் இரண்டு விதமான உள்ளாடைகள் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஒரு ஜட்டியில் சிவனின் உருவமும், மற்றொரு ஜட்டியில் 'ஓம்' என்ற எழுத்தும் அச்சிடப்பட்டுள்ளது.

'இந்துவாக இருந்தால் பெருமைப் படுங்கள்' என்ற வாசகமும் இந்த உள்ளாடைகளில் எழுதப்பட்டுள்ளன. தெய்வமாக வழிபடும் சிவனின் உருவமும், பிரணவ மந்திரமான 'ஓம்' என்ற எழுத்தும், பெண்களின் உள்ளாடையில் அச்சிடப்பட்டுள்ளதற்கு அமெரிக்க வாழ் இந்துக்கள் கண்டனம் தெரிவித்துள்ளதோடு உடனடியாக இந்த உள்ளாடை விற்பனையை வாபஸ் பெறவேண்டும் எனவும் வற்புறுத்தி யுள்ளனர். (து)



இந்தியாவின் வடக்கு பகுதியில் தற்போது கடும் பனிமழை பெய்து வருகிறது. சாலைகள் முழுவதும் பனித்துகள்கள் படிந்திருப்பதால் போக்குவரத்து பெரிதும் பாதககப்படுகிறது. சாலையில் படிந்திருக்கும் பனித்துகள்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள வாகனம் இது. சிறிது நேரம் நின்றால் இந்த வாகனத்தையே பனித்துகள்கள் மூடிவிடும் போலிருக்கிறது.

# அண்டார்ட்டிகாவில் உயர்ந்த பனிச்சிகரத்தில் வானிலை மையம்

பனிபடர்ந்த துருவப் பிரதேசமான அண்டார்டிகாவின் மிக உயர்ந்த சிகரத்தில் தன்னியங்கி வானிலை ஆய்வுக் கருவியை சீன துருவ ஆய்க் குழு வெற்றிகரமாக அமைத்துவிட்டு நாடு திரும்பியுள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 4039 மீற்றர் உயரத்தில் உள்ள இப் பனிச் சிகரத்தை தொட்ட முதல் குழு என்ற சாதனையும் படைத்துள்ளது. இது குறித்து சீன கடலியல் நிர்வாகம கூறியிருப்பதாவது,

சீனாவின் கிழக்குத் துறைமுக நகரான ஷாங்காயிலிருந்து 13பேர் கொண்ட சீன துருவ ஆய்வுக்குழு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம திகதி இச்சாதனைக்காக அண டார்டிக்காவுக்குப் புறப்பட்டது. இவர்கள் நீண்ட பயணத்துக்குப் பிறகு கடந்த மாதம் 18ஆம் திகதி கடல் மட்டத்திலிருந்து 4039மீற்றர் உயரத்தில் உள்ள அண்டார்ட்டிக் துருவ பனிச்சிகரத்தைத் தொட்டனர்.

அந்த இடத்தில் சுற்றுச்சூழல் சீதோஷ்ண நிலையக் கண்காணிகக, இடைக்கால அறிவியல் ஆய்வுநிலையத்தை அமைத்தனர். பனிச் சிகரத்தின் இதர பகுதிகளையும் அக் குழுவினர் ஆய்வு செய்தனர்.

அத் துடன் அப்பகுதியில் தன் னியங்கி வானிலை ஆய்வு கருவியை வெற்றிகரமாக சீனக்குழு நிறுவியது. இந்தக் கருவியை சீனாவும் அவுஸ்திரேலியாவும் இணைந்து தயாரித்துள்ளன. உள்ளூர் தட்ப வெப்பம், ஈரப்பதம ,சூரியக் கதிர்வீச்சு, காற்று சக்தி மறறும் அது வீசும் திசை உள்ளிடட தகவல்களை இந்தக் கருவியைக் கொண்டு செயற்கைக கோள் மூல மாக அறியலாம். இந்தக் கருவி மைனஸ் 90டிகிரி குளிரிலும் வேலைசெய்யும் திறன் படைத்தது எனச் சீனக் கடலியல் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (து)

# ஈராக் வன்முறையில் இருபத்துநான்கு பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் மையத்தில் நேற்று முன் தினம் நடந்த குண்டுவெடிப்பில் 14பேர கொல்லப்பட்டனர். மேலும், இரண்டு இடங்களில் நடந்த தாக்குதலில் 10 பேர் பலியாயினர்.

ஈராக்கில் சதாம் ஆதரவு கெரில்லாக்களின் தாக்குதல் தினசரி நிகழ்ச்சியாக உள்ளது. பக்தாததில் உளள பழைய விமானப்படைத் தளத தில் இராணுவத்துக்கு ஆள் சேர்க் கும் பணி நடந்துகொண்டிருந்த இடத் தில நேற்றுமுன்தினம் கார்க்குண்டு வெடித்ததில் 14பேர் உடல் சிதறிப் பலியாயினர்.

பக்தாத்தில் தீவிரவாதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையே நடந்த சண்டையில் அப்பாவி மக்கள் ஐந்துபேர் கொல்லப்பட்டனர். மூன்று பொலிஸ் அதிகாரிகளும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

பக்தாத்தில் தேசிய கட்சியைச் சேர்ந்த மித்தால் இ அலோசி எனற தலைவரைக் கொலவதற்காக தீவரவாதிகள் துப்பாக்கியால் சுடட தில் அலோசியின் பாதுகாவலர்கள் இருவர் கொல்லப்பட்டனா. காயமின்றி அலோசி உயிர் தப்பினார்.

பக்தாத்தின் மத்திய பகுதி யில தீவிரவாதிகள் பீரங்கி தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் கொல்லப்படடனர் என்ற விபரம் தெரியவில்லை. (து)

# குற்றப்பத்திரிகை பெற்றுக்கொள்ள ஜெயேந்திரருக்கு நீதிமன்றம் அழைப்பாணை



காஞ்சி வரதராஜப் பெருமாள கோயில் மேலாளர் சங்கரராமன் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள காஞ்சி சங்கராச்சாரியர் ஜெயேந்திர சரஸ்வதி, குற்றப் பத்திரிகை பெற்றுக்கொள்ள இன்று ஆஜராகுமாறு காஞ்சி நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

சங்கரராமன படுகொலை வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயேந்தர சரஸ்வதி, பிணையில் விடுதலைபெற்று தற்பொழுது கலவை மடத்தில் தங்கியுளளார்.

அவரும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு பிணைவிடுதலை பெற்றுளள மேலும் இருவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என்று அழைப்பாணை அனுப்புமாறு காஞ்சிபுரம் முதன்மை குற்றவியல் நடுவர் மன்ற நீதிபதி ஜி.உத்தமராஜ் நேற்று உத்தரவிட்டார். இவ்வழக்கில் 2 ஆவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள இளைய மடாதிபதி விஜயேந்திர சரஸவதி, 3ஆவது குற்றவாளி சுந்தரேச ஐயர், 4வது குற்றவாளி ரகு ஆகியோர் உட்பட 20பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் நீதிபதி உத்தமராஜ் உத்தரவிட்டார். குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவருக்கும் குறறப் பத்திரிகை அளிக்கப்பட்ட பிறகு காஞ்சி சங்கரராமன் படுகொலை வழங்கு செங்கற்பட்டு அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அங்கு விசாரிக்கப்படும் என்று கூறப்படுகிறது. (து)

## பல்லை சுத்தமாக துலக்காவிட்டால் இருதய நோய்?

(வாஷிங்டன்)

பற்களைச் சுத்தமாக துலக்காவிட்டால், இருதயநோய் வரும் என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மாரடைப்பு ஏற்படாத 657 பேரிடம நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளது. பல் ஈறுகளில ஏற்படும் நோய்கள், இருதய நோய்க்கு வழிவகுக்கும் என்று கொலம்பியா பல்லைக்கழக மருத்துவ மைய டாக்டர் மோய்ஸ் டெஸவரீக்ஸ கூறி இருக்கிறார்.

ஈறு நோய்களை உண்டாக்கும கிருமிகள் இரத்த நாளங்களுக்கும் பரவி இரத்தக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்துகிறது என்றும அவர் கூறியுள்ளார். (து)

# உலகைச் சுற்றி உலக சாதனை பிரிட்டிஷ் இளம் பெண்ணின் சாகசம்

(லண்டன்)

தன்னந்தனியாகக் குட்டிப் படகில் 71நாட்கள் கடல வழியாக உலகைச் சுற்றிப் புதிய சாதனை படைத்துள்ள பிரிட்டனைச் சேர்ந்த 28வயதான இளம்பெண் எலென்மெக் ஆதருக்கு நாலா பக்கங்களிலுமிருந்து புகழ் மாலைகள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன.

'உங்கள் சாதனை என்னைப் பிரமிக்கச் செய் கிறது' என்கிறார் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர்.

'ஒட்டுமொத்த தேசமும் உங்களால் பெருமையடைகிறது; உலகெங்கிலுமுள்ள பலர், உங்கள் திறமையை, துணிசசலை, தன்நம்பிக்கையை முன்மாதிரியாக இனி எடுத்துக் கொள்வார்கள்' எனப் பாராட்டுகிறார் பிரிட்டிஷ் ராணி எலிஸபெத்.

பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் கடல் எல்லையைப் பிரிக்கும் பகுதியிலிருந்து கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி படகில் கிளம்பினார் மெக் ஆதர். இவரின் 42ஆயிரம் கிலோ மீற்றர் நீண்ட நெடிய பயணம் நேற்றுமுன்தினம் காலை 3.59க்கு தொடங்கிய இடத்திலேயே முடிவடைந்தது.

42ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தைக் கடக்க இவர் எடுத்துக்கொண்ட காலம் 71 நாட்கள் 14மணி 18நிமிடம் 33 வினாடிகள்.



சாதனையின் போது சந்தித்த சோதனைகள் கொஞ்சநஞ்சமல்ல எனக்கூறும் மெக் ஆதர், கிறிஸ்மஸ் தினத்தன்று கடுமையான கடற்புயலில் சிக்கித் தவித்ததாகவும், ஒரு நாளுக்கு 4மணிநேரம் மாத்திரம் தூங்கி, ஒரு சிறிய 'பேணர் ஸ்டவை' வைத்துச் சமையலைக் கவனித்ததாகவும், கடல் நீரைச் சுத்திகரித்துக் குடித்து வந்ததாகவும் தெரிவிததுள்ளார். (து)

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தை தேய்க்கும் படை - குறள்

வலம்புரி

# இன ஒற்றுமை வலுப்பெற வேண்டும்

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் - தமிழர்களின் உரிமையை வழங்குவதில் சிங்கள அரசுகள் ஒருபோதும் முன்வரப் போவதில்லை என்பது உறுதியாகி விட்டது.

சிங்கள அரசுகள் உலக நாடுகளை ஏமாற்றி தனது ஆட்சியை நகர்த்திச் செல்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறதே தவிர, தமிழர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை தீர்த்து வைத்து அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள், அவர்களுக்கும் சம உரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

இதனை ஆணித்தரமாக கூறுவதற்கு இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் நேற்றுவரையான நிகழ்வுகளை சான்றாக்கிக் கொள்ளலாம்.

20 வருடகால யுத்தத்திற்கு முடிபு கட்டும் முயற்சியின் ஓர் பிரதான அங்கமாக நோர்வேயின் அனுசரணையுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

யுத்தம். ஒருபுறத்தில் நடக்கும்போது மறுபுறத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்ற கருத்தை தென்னிலங்கை அரசியல்வாதிகள் முன்வைத்ததுமுண்டு.

யுத்தம் நடைபெறும்போது சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தலாம் என்ற கருத்தியல் எவ்வளவு தூரம் முட்டாள்தனமானதென்பது வெளிப்படையாக தெரிந்தபோதிலும் அந்தக் கருத்தை தென்னிலங்கை அரசியல்வாதிகள் முன்வைத்தமைக்கான காரணம் சமாதானத்தை விரும்பாமையே ஆகும்.

இருந்தும் சிங்கள மக்கள் சமாதானத்தை வலியுறுத்தியதன் காரணமாக ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்துகொண்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் ரணில் விக்கிரமசிங்கவும் கைச்சாத்திட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையானது இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஓர் முக்கிய திருப்பமாக அமைந்தது.

அன்று செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையே இன்றுவரை இலங்கை மக்களுக்கு வாழ்வளித்து வருகின்றது.

அத்துடன் 20 வருடகால யுத்தத்திற்கு நியாய பூர்வமான தீர்வுடன் முடிபுகட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளும் வலுப்படுத்திக் கொண்டனர். விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்புகின்றனர் என்பதற்கு தக்க சான்று இரண்டு உண்டு.

அதில் ஒன்று யுத்தநிறுத்த உடன்படிக்கையில் விடுதலைப் புலிகள் கைச்சாத்திட்டமை. மற்றையது விடுதலைப் புலிகளினால் தீர்வுத் திட்டம் எழுத்து மூலமாக முன்வைக்கப்பட்டமை.

இந்த இரண்டு நிகழ்வுகளும் விடுதலைப் புலிகள் சமாதானத்தை வரவேற்கின்றனர் என்பதற்கு போதுமானதாகும். ஆனால் கபட நோக்கம் கொண்ட இலங்கை அரசுக்கு இவை எதுவுமே தெரியவில்லை. மாறாக தமிழ் மக்களை நசுக்க வேண்டும் அவர்களை அடிமைப்படுத்த வேண்டும் என்ற உணர்வே மேலோங்கி இருந்தது.

அரசின் இத்தகைய வக்கிர இயல்பை முறியடிக்கவேண்டுமாயின் அதற்கு இருக்கக்கூடிய ஒரே வழி உலகத் தமிழினம் ஒன்றுசேர்வதும் ஒற்றுமைப்படுவதுமே ஆகும்.

# இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு உலக வங்கி தொடர்ந்தும் நிதி வழங்கும்

### ஜனாதிபதியிடம் உலக வங்கித் தலைவர் உறுதிமொழி

(கொழும்பு)

சுனாமியினால் பாதிப்படைந்த இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிக்கு மேலும் நிதியுதவி வழங்க உலக வங்கி தனது பூரண ஒத்துழைப்பினையும் உதவிகளையும் வழங்கவுள்ளதாக உலக வங்கியின் தலைவர் ஜேம்ஸ் வொல்ட்வென்ஸன் உறுதியளித்துள்ளார்.

இஸ்லாமபாத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்த உலகவங்கியின் தலைவர் இந்த உறுதி மொழியினை வழங்கினார்.

இந்தச் சந்திப்பின் போது நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சி பற்றியும் "சுனாமி" பேரனர்த்தம் இடம்பெற்ற பின்னர் இலங்கையில் உருவாகியுள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டன.

இம் முயற்சிக்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பாராட்டிய அவர் கஷ்டமான இப் பணிகளை அரசாங்கம் மேற்கொள்வதால் அதற்காக எதிர்நோக்கும் பிரச்சினைகளை இலகுவாக எதிர்கொள்ளும் மனத்திடத்தை பாராட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.742 மில்லியனை திறைசேரி வழங்கியுள்ளது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான பணிகளுக்காக இதுவரை திறைசேரியினால் 742 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

அரச கணக்காளர் திணைக்களத்தின் ஊடாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாவட்ட செயலாளர்களுக்கு நேரடியாக இந்நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்திற்கு 32 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 36 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 28 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்திற்கு 10 மில்லியன் ரூபாவும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 65 மில்லியன் ரூபாவும், திருகோணமலை மாவட்டத்திற்கு35 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

மற்றும் களுத்துறை மாவட்டத்திற்கு 75 மில்லியன் ரூபாவும் ,காலிமாவட்டத்திற்கு 70 மில்லியன் ரூபாவும் கொழும்பு மாவட்டத்திற்கு 46.50 மில்லியன் ரூபாவும், திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ரீதியாக கம்பஹா, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், பொலனாறுவை, மொனறாகலை மற்றும் மாத்தளை ஆகியவற்றுக்கும் முறையே 7 மில்லியன், 40 மில்லியன், 40 மில்லியன், 2 மில்லியன்,10.20 மில்லியன் 10.26 மில்லியன், 0.15 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதற்காகவும் சேதமடைந்த பகுதிகளை புனரமைத்து மீள் கட்டுமானப் பணிகளை மேறகொள்வதற்காகவும் அரசாங்கம் வழங்கியுள்ள இந்நிதியானது பாகுபாடன முறையிலே பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளதாக பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலைமை மேற்படி நிதிப்பகிர்வில் இருந்து தெளிவாகின்றது.சுனாமியின் தாக்கத்திற்கு இலக்காகி பெரும் அழிவுகளுக்கு உள்ளாகியுள்ள முல்லைத்தீவு ,யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கென வழங்கப்பட்ட நிதியானது தென்பகுதிகளுக்கு வழங் கப்பட்ட தொகையில் இருந்து மிகக்குறைவாகும் இது இவ்வாறு இருக்க சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கம் இந்நிலைப்பாட்டில் உதவிகளை வழங்கியபோதும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச சமூகம் மற்றும் பொது அமைப்புக்கள் என்பன பெருமளவில் நிவாரணப் பொருட்களை அர சாங்கத்திடம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இலங்கை–பாகிஸ்தான் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தக ஒத்துழைப்பு தொடர்பான முறைமைகள் குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு நேற்று முன் தினம் பாகிஸ்தானிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாகிஸ்தான் ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற விருந்துபசாரத்தின் போதே இதனைத் தெரிவித்தார்.

வலயத்தின் ஒரு நாகாிகத்தைக் கொண்ட இரண்டு நாடுகளாக இலங்கை பாகிஸ்தானுடன் இணைந்து செயற்படுவது பிரச்சினைகளை ஏற்படுத்தாது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையே சம்பிரதாய அரசு மற்றும் பாதுகாப்பு உறவுகள் வலுவான வர்த்தக உறவுகளை நோக்கி திரும்பியுள்ளமை குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் முறைகள் குறித்து பாகிஸ்தான் உன்னிப்பாக அவதானித்து வருவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தின் போது பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்தார்.

இந்நிலையில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்று நேற்று கைச்சர்திடப்பட்டுள்ளது.

இந்த உடன் படிக்கையில் இலங்கையின் சார்பில் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்கவும் பாகிஸ்தான் சார்பில் அந்த நாட்டு பிரதமரும் கைச்சாத்திட்டனர்.

இலங்கை-பாகிஸ்தான் வர்த்தக சம்மேளனங்களிற்கு இடையிலான உடன்படிக்கைகள் சிலவும் கைச்சாத்திடப் படவிருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ற-9)

# பதுளையில் வைரஸ் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது

(பதுளை)

பதுளை வைத்தியசாலையில் வைரஸ் தாக்கம் காரணமாக இருதய நோயினால் இதுவரை 74 பேர் பீடிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த ஆஸ்பத்திரியின் மருத்துவ அத்தியட்சகர் தயா தர்மபிரிய இது தொடர்பாக தகவல் அளிக்கையில், கடந்த 4 வாரஙகளில் இந்நோய்த்தாக்கத்திற்கு பதுளை பிரதேச வாசிகள் பலர் ஆளாகியுள்ளனர் எனத் தெரிவித்திருக்கிறார்.

தியததலாவ, பண்டாரவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இதில்அடங்குவர். 25 வயதிற்குட்பட்டவர்களுக்கு மத்தியிலேயே இந்நோய்த்தாக்கம் ஏற்பட்டிருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் ஆயினும் இந்நோயினால் எவரும் மரணமடையவல்லை. இவ்வைரஸ் எவ்வாறு பரவியதென சுகாதார அமைச்சின் தொற்று நோய்த்தடுப்புப்பிரிவு பரிசோதனைகள் மேற்கொண்டு வருகிறது.

அதேவேளை, இந்நோயைக் குணப்படுத்த தேவையான மருந்துவர்கள் ஊவா மாகாண ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-7)

# மீனவர்களுக்கு நிவாரணம்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கு ஆறு மாதகாலமாக வழங்கப்படாதிருந்த நிவாரணம் தற்பொழுது வழங்கப் பட்டுவருகிறது.

வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கு சூரியகதிர் இராணுவநடவடிக்கைக்காக வழங்கப்பட்ட நிவாரணம் கடந்த ஆறுமாதகாலமாக வழங்கப்படவில்லை. இவ் நிவாரணம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. (ப-35)

## சாயி அருளமுதம்



தமது பிள்ளைகள், சுற்றத்தார் சம்பாத்தியம், செல்வம் ஆகியவற்றையிட்டுள்ள கவலை ஏக்கம் என்பவற்றினாலேயே அனேகமாக தியானம் தடைப்படுகிறது. அவையாவும் பிரம்மம் அல்லது பரப்பிரம்மத்துக்கு இயல்பாயிருக்கும் மாயையின் வெளிப்பாடேயாதலால் நீங்கள் சரணடையும் பரமாத்மா அல்லது இறைவன் நிச்சயமாக அச்சத்தினின்று உங்களை வீடுவிப்பார் ஏன்? நீங்கள் ஒவ்வொருவருமே 'ஆத்மன்' அன்றிவேறல்லர் அதனாலேயே நான்பேசத்தொடங்கும் பொழுது திவ்யாத் மஸ் வருபர்களே!' என உங்களை விளிக்கிறேன்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை



லெப் கேணல் கௌசல்யன் உட்பட்ட மாவீரர்களின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதை படங்களில் காணலாம்.

# கௌசல்யனின் படுகொலை மிகவும் பாரதூரமானது

## பிரதியமைச்சர் தசநாயக்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் கொல்லப்பட்டமையானது பாரதூரமான விடயமே என மட்டக்களபபு மாவட்டத்தின் புனரமைப்பு பணிகளுக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதியமைச்சர் டி.எம். தசநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். சுனாமியனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு கௌசல்யன் பாரிய பங்களிப்பினை ஆற்றினார். அதனை என் மூலமாக அரசாங்கத்திற்கு தெரிவித்து அரசாங்கத்தின் பாராட்டினையும் அவர் பெற்றார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர் களுக்கான வீடமைப்புத்திட்டங்களை நாம் அறிவித்தபோது அதற்கான இடங்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஒதுக்கித் தருவதாக கௌசல்யன் உறுதிபடத் தெரிவித்தார்.

இந்த நிலையில் கௌசல்யனின் கூற்றுக்கமைய நாம் தொடர்ந்து செயற்படுவோமென அவர்மேலும் தெரிவித்தார்.

(ச-4)

# கிழக்கில் துக்கம்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் உட்பட 6 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும் நேற்று கிழக்கு மாகாணத்தில் பூரண கடையடைப்பும் துக்கதினமும் அனுஷ்டிக்கப்பட்டது.

பல்வேறு பொது அமைப்புகளினால் இந்தப் பணிப்புறக்கணிப்பு, கடையடைப்பிற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டும், அகவணக்கப் பதாகைகள் கட்டப்பட்டும், பொது இடங்களில் சோககீதம் ராகம் ஒலிக்கப்பட்டும் துக்க நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இம் மாவட்டங்களில் பாடசாலைகள் இயங்கவில்லை. அரசாங்க, தனியார் அலுவலகங்கள், நீதிமன்றங்களின் அலுவல்கள் பாதிக்கப்பட்டன. வீதிகளில் வாகனப் போக்குவரத்து சேவைகள் நடைபெறவில்லை. சந்தைகள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

இன்றும் மட்டக்களப்பில் பூரண துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதேவேளை யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலும் நேற்று சோக கீதங்கள் இசைக்க விடப்பட்டிருந்தது. வீதிகள், சந்திகள் மற்றும் அலுவலகங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வாழைகள், தோரணங்கள் என்பனவும் வீதியெங்கும் கட்டப்பட்டிருந்தது.

(ச)

# கடலில் குளித்துக் கொண்டிருந்த கனடா பெண் நீரில் மூழ்கி மரணம்

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்கவென இலங்கை வந்திருந்த கனடா நாட்டு தொண்டர் நிறுவனத்தைச்சேர்ந்த பெண்ணொருவர் திருகோணமலைக்கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று திருகோணமலையில் இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாக அவர்களது பணிகள்யாவும் நிறுத்தப்பட்டது. இதனால் அவர்கள் தமதுபொழுதை உல்லாசமாகக் கழித்தனர்.

திருகோணமலை. மூன்றாம் கட்டைப் பகுதியிலுள்ள சீலோ உல்லாச விடுதியில் தங்கியிருந்த் இவர்களில் பிரஸ்தாபப் பெண்கடலில் நீராடிய பொழுது நீரில்மூழ்கி மரணமானார்.

கனடா நாட்டைச்சேர்ந்த சோனியா (வயது 40) என்பவரே நீரில் மூழ்கி மரணமானவர்.

இவரைக்காப்பாற்றச் சென்ற ஜேர்மன் நாட்டைசசேர்ந்த ஊழிக் எனபவரும (வயது 34) திருகோண மலையைச் சேர்ந்த மாயன் அன்ரனி (வயது 22) என்பவரும் ஆபத்தான நிலையில் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில்சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(ச-4)

# மரபணு பரிசோதனைக்காக 'சுனாமி 81' நேற்று கொழும்புக்கு

சுனாமிப் பேரலையால் அநாதரவாகி கல்முனை வைத்தியசாலை நிர் வாகத்தின பராமரிப்பிலுள்ள நான்குமாத ஆண்குழந்தை சுனாமி 'பேபி 81'இன் உண்மையான பெற்றோரைக் கண்டறிவதற்கானமரபணு பரிசோதனை நேற்று கொழும்பிலுள்ள தனியார் மருத்துவ ஆய்வுகூடமொன்றில் நடைபெற்றது.



கடந்த 2ம் திகதி கல்முனை நீதிமன்ற உத்தரவின்பேரில் இந்த மரபணு பரிசோதனை கொழும்பிலுள்ள தனியார் மருத்துவ ஆய்வுகூடமொன்றில் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட மருத்துவ ஆய்வு கூடத்தில் குழந்தையின் மாதிரி இரததமும், உரிமை கோரும் பெற்றோரான ஜூனித்தா -ஜெயராஜா தம்பதிகளின் இரத்தமும் பெறபபட்டது. இதன்போது யூனிசெவ பிரதிநிதி யொருவரும் பிரசன்னமாகியிருந்தார்.

மரபணு பரிசோதனை அறிக்கை 14 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக குழந்தை பொலிஸ பாதுகாப்புடன் நீதிமன்ற அதிகாரி, மூன்று தாதிமார் மற்றும் சட்டத்தரணி சகிதம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டது.

பயணத்தின்போது குழந்தை நித்திரை கொண்டதால் அதன் நலன்கருதி அம்புலன்ஸ் மெதுவாகச் சென்றதாக நீதிமன்ற அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை குழந்தையின் கொழும்புப் பயணத்தினையடுத்து 35 ற்கும் மேற்பட்ட வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தகவல்சேகரிக்க தனியார் வைத்தியசாலையின் முன்பாக திரண்டிருந்தனர்.

(ச)

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்குள் தற்காலிக குடிசை

## யாழ்.செயலகக் கலந்துரையாடலில் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை யாழ். செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீள்கட்டுமானப்பணிகளை துரிதப்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக குடிசைகளை ஒரு மாதத்துக்குள் அமைக்கவும் இதேபோன்று நிரந்தர வீடுகளை கட்டிக்கொடுக்கவும் சிலஅரசசார்பற்ற நிறுவனங்கள் உறுதியளித்துள்ளன.

இதேவேளை கடற்கரையில இருந்து 100 மீற்றர் தூரத்தில் இராணுவத்தினரால் அடையாளக் கட்டைகள் நடுவது தொடர்பாக மக்கள் அச்சம் அடைந்துவருவதாக கூறப்பட்டபோது இக்கட்டைகள் தற்காலிகமாக அகற்றப்பட்டு வருகின்றதெனவும் மக்களுடன் தாம் எந்தவித பிரச்சினைகளிலும் ஈடு படப்போவதில்லையெனவும் இராணுவத்தினர் தெரிவித்ததாக வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் சூரியகுமார் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி சுனில் தென்னக்கோன யாழ். மாவட்ட பொலிஸ்மா அதிபர் மௌனகுரு, யாழ். மாவட்ட அரச அதிகாரிகள், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின், பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப்பிரதி நிதிகள் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(ச-19)

## கௌசல்யனின்...

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகங்களில் பொதுமக்களின் அஞ்சலிக்காக அவை வைக்கப்பட்டு இரவு களுவாஞ்சிக்குடிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. நேற்றிரவு முதல் இன்று காலை வரை களுவாஞ்சிக்குடியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் வைக்கப்படும்.

பின்னர் மட்டக்களப்பு நகரிலுள்ள அரசியல் பணிமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து கிரானுக்கு கொண்டு செல்லப்படும். பின்னர் அங்கிருந்து கொடுவாமடு பாலம் ஊடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்கு கொண்டு செல்லப்படும். அங்கு விடுதலைப் புலிகளின் தளங்களில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்பு மாலை தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல்கள் விதைக்கப்படும் என விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## நோர்வேயின்...

கலந்துகொள்ளவுள்ளனர். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனுடன் கேணல் பானு தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே பாலகுமாரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவரான நாகேஸ் ஆகியோர் மட்டக்களப்புக்கு சென்றுள்ள குழுவில் அடங்குகின்றனர். இவர்களை தளபதிகள் பொறுப்பாளர்கள் போராளிகள் வழியனுப்பி வைத்தனர்.

(ச)

## யுத்தநிறுத்த...

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை சீர்குலைக் கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நிறுத்தி நிரந்தர, சமாதானம் என்ற நீண்டகால நோக்கத்தை எய்த பாடுபடவேண்டும் எனவும் கோபிஅனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(த)

## உச்சக்கட்ட...

பணிகள் துரிதகதியில் இடம்பெறுகின்றன. இது தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தினை உண்டாக்கியுள்ளது.

இந் நிலையில் சுனாமியின் பின்னரான புனரமைப்புப் பணிகளுக்கான இணைப்புக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்கின்ற போதிலும் ஜப்பான் மாற்றுக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

இது தொடர்பில் இலங்கைக்கு வருகை தரும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் ஹக்கீம் தெரிவித்தார்.(த-04)

நாதன்ஸ்
யாழ்ப்பாணம் (குளிரூட்டியது)
09.02.2005 முதல்
பார்த்திபன் - திரிசா பலோட வடிவேலு இன்னும் பலர் நடித்த
காதல் கிறுக்கன்
தினசரி 4 காட்சிகள்
10.30,2.30,6.30,9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
சத்தியராஜ், நமீதா ஆகியோர் நடித்த
மகா நடிகன்
கா.நே -11.00, 2.45, 6.00 (பு.நே)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.